ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,869 — 1969 අගෝස්තු 29 වැනි සිකුරාදා — 1969.8.29

14,869 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 929 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | 955 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 947 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 950 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 954 | நானாவித அறிவித்தல்கள் | 956 |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவிதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுதிகள்.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவும் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. AB/77/X. 2133/69

## உள்ளூராட்சி அமைச்சின் நாடு, நகர நிருமாணப் பிரிவு

### புவியியலாளர் பதவி

உள்ளூராட்சி அமைச்சின் நாடு, நகர நிருமாணப் பிரிவில் புவியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட வடிவங்களிற் தயாரிக்கப்பட்டு செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு, அ.பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1969.9.12 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1969.9.17.

**குறிப்பு.**—(1) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்வோர் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரை இடப்படாததுமான ஓர் கடித உறையில் தமது சொந்த முகவரியை எழுதிக் கடிதத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்கசேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்,

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டதெனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.

(3) வெளிநாட்டில் உள்ள அபேட்சகாகள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அபேட்சகர்கள் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந் நாட்டிற்குக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(4) மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும் : இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அலுவலாளர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களா என்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட அலுவலாளரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் உபகாரச்சம்பளம் உடையதுமாகும். தெரிவு செயயப்பட்ட அபேட்சகர்கள் விதவையர், அனாதையர் உபகாரச்சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்தல் வேண்டும்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு : ஆண்டிற்கு ரூபா 4,080 தொடங்கி ஆண்டிற்கு ரூபா 8,400 வரை செல்லும் ; ஆண்டிற்கு ரூபா 360 முறையில் 12 சம்பள உயர்வு.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையார் என்பதற்குத் திருப்தியான சன்று காட்டுதல் வேண்டும் :

(அ) சிறந்த நற்குணம் உடையவராகவும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1969.9.12 ஆம் திகதியில் 22 வயதிற்குட்படாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கணிக்கப்படமாட்டாது ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் புவியியலில் 1 ஆம் 2 ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) புவியியற் தகவல் சேர்ப்பதில் குறைந்தது மூன்று வருட அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு** : சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமையும் தொழில்நுட்பத் தகைமைபற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி அடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்கசேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விணணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலாளருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம், இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் பிரகாரம் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெறறமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியில் இருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
அ. பெ. இல. 500,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு ஆகஸ்து மீ 22 ந் உ.

8–1436/1—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## சௌக்கியத் திணைக்களம்

### பூச்சியியலாளர் (என்ரோமோலொஜிஸ்ற்) பதவி

சௌக்கியத் திணைக்களத்திலுள்ள பூச்சியியலாளர் (என்ரோமோலொஜிஸ்ற்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்: 1969.9.12 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்: 1969.9.17.

**குறிப்பு.**—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப் படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றிச் சம்பளம் பெறும் தகுதி உள்ளதுமாகும்.

3. **சம்பளங்களும், உதவிப் பணங்களும்.**—இப்பதவிக்குரிய வருடாந்த ஆரம்பச் சம்பளம் ரூபா 4,080. பின்னர் வருடாந்தம் 360 ரூபா வீதம் 12 வருடங்களும், வருடாந்தம் 480 ரூபா வீதம் 10 வருடங்களும் சம்பள உயர்ச்சி பெற்றபின் ஆகக்கூடிய உச்சச் சம்பளம் வருடாந்தம் 13,200 ரூபாவாக இருக்கும். இடையில், 8,400 ரூபாவும், 11,760 ரூபாவும் வருடாந்தச் சம்பளமாகு முன்பு வினைத்திறமைகாண் தடைகள் உண்டு. அத்துடன், 11,280 வருடாந்தச் சம்பளமானதும் அது இரண்டு வருடங்களுக்கு அதே அளவில் தொடர்ந்திருக்கும்.

(i) வருடாந்தச் சம்பளமாக 8,400 ரூபாவுக்கு மேல் பெறும் விஷயம் பூச்சியியலில் தத்துவக்கலாநிதி (பிஎச்.டி.) பட்டம் பெறுவதைப் பொறுத்ததாயிருக்கும்.

(ii) பூச்சியியலில் தத்துவக்கலாநிதி (பிஎச்.டி.) பட்டம் அல்லது விஞ்ஞான முதுமானி (எம்.எஸ்ஸி) பட்டம் உள்ள ஒரு பரீட்சார்த்தி தெரிவுசெய்யப்பட்டால், அவர் மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 5,160 ரூபா ஆரம்பச் சம்பளம் பெறுபவராக நியமிக்கப்படத் தகுதிவாய்ந்தவராவார்.

**4. தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—

(அ) நற்குணமும், தேகாரோக்கியமும் உடையவரென்றும் ;

(ஆ) 1969.9.12 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவரென்றும், 35 வயதுக்கு மேற்படாதவரென்றும் ; (எற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை நிபந்தனை கிடையாது).

(இ) பூச்சியியலை ஒரு விசேட பாட்மாகக்கொண்டு அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றின் விலங்கியல் விஞ்ஞானமானி (விசேட) பட்டம் (அதாவது பி. எஸ்ஸி ஸ்பெஷல் டிகிறி) பெற்றவர் என்றும் (1 ஆம், 2 ஆம் வகுப்பு மேற்றகைமை (ஒனர்ஸ்) பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்) ; அல்லது

(ஈ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பூச்சியியலில் தத்துவக் கலாநிதி (பிஎச்.டி.) அல்லது (எம். எஸ்ஸி.) பட்டம் பெற்றவர் என்றும் திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

5. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் ஒன்றை அல்லது முழுவதையும் கேட்கப்படும் நேரத்தில் சமர்ப்பிக்கவேண்டும்:—

(அ) பிறப்புச் சான்றிதழ் (**குறிப்பு.**—ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கதுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டச் சான்றிதழ் அல்லது உயர்கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) இரண்டு நற்குணச் சான்றிதழ்கள். இவற்றிலொன்று கல்விகற்ற தாபனத்தின் அதிபர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் சான்றிதழ்கள் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ்கள் அன்றேல் அவை இரண்டும் ;

(உ) சிங்களத்தில்/தமிழில் அல்லது அவை இரண்டிலும் சித்தியடைந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

**கவனிக்க.**—(i) விண்ணப்பத்துடன் சாதனங்களோ, சாதனங்களின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(ii) சாதனங்களைக் கேட்கும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகளது விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்கசேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம்விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாசபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1969 ந் ஆண்டு ஓகஸ்ட் மீ 22 ந உ.

8—1436/2—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல.14,869

---

இல. AB. 64/X 2135/69

## காணிக் கமிசனர் திணைக்களம்

### சமூகவியலாளர் பதவி

காணி ஆணையாளர் திணைக்களத்திலுள்ள சமூகவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்தத் திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் நிரப்பப்பட்டு செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. 500, கொழும்பு 1, என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள், 1969.9.12 ம் திகதி ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.9.19 ம் திகதி.

**குறிப்பு.**—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை அஞ்சல்மூலமாக அனுப்புமாறு வேண்டுவோர், தம்சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரை ஒட்டப்படாததுமான ஒரு கடித உறையை தய்து கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலிருப்பவரா ? அல்லது அல்லாதவரா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்கு கடைசித் திகதிவரைக்கும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்கு தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அவ் அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அந்நாட்டுக்கு மிகவும் கிட்டியுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாக இருக்கின்றார்களா இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு மருத்துவச் சோதனை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாளர்களிடம் செல்லுமாறு கேட்கப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைகாகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய கட்டணத்தையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்துதல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரிமையற்றதுமாகும். தெரிவு செய்யப்படுவோர் அரசாங்க சேவை சகாயநிதிக்குப் பணம் செலுத்துதல் வேண்டும். இப்பதவி நியமனம் 3 வருடகாலப் பரிசீலனைக்கு உட்பட்டதாகும்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரித்தான சம்பளமும் படிகளும் பின்வருமாறு :—வருடமொன்றுக்கு ரூபா 4,080 —360 × 12, 480 × 10—13,200 (ரூபா 11,280 ல் இரண்டு வருட நிறுத்தமும் ரூபா 8,880 க்கும் ரூபா 11,760 க்கு முன்னதாக வினைத்திறமைகாண் தடையுண்டு).

**குறிப்பு.**—(i) நியமனம் பெறுபவர் அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையில் சமூகவியலில் (பி. ஏ.) பட்டத்திற்கு மேல் படிப்பில் உள்ளவர் தெரிவு செய்யப்பட்டால் தெரிவு செய்யப்படுபவர் வருடமொன்றுக்கு 5,160 ரூபா சம்பளத்தில் நியமிக்கப்பட உரிமையுடையவராவர்.

(ii) அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையில் சமூகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை அல்லது அதற்கு மேற்பட்ட பட்டத்தைப் பெறுவிடில் அவர் வருடம் 8,880 ரூபா சம்பள அடிப்படையிலிருந்து தகுதிகாண் நிலையிலிருந்து மேற்செல்ல மாட்டார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையை உடையோரென்பதற்கு தக்க திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமுடையவரென்றும், நல்ல உடல்நலமுடையவரென்றும் ;

(ஆ) 1969.9.12 ம் திகதிக்கு 22 வயதிற்குக் குறைவுபடாதவரென்றும் அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் சமூகவியலில் ஓராம் பிரிவில் அல்லது இரண்டாம் பிரிவில் திறமைச் சித்தி பெற்றவரென்றும், பட்டம் பெற்றவர் 35 வயதிற்கு மேற்படாதவரென்றும், (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாடு செல்லுபடியாகாது) ;

(இ) அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் சமூகவியல் பாடத்தில் ஓராம் அல்லது இரண்டாம் பிரிவில் திறமைச் சித்தி பெற்றவர் அல்லது சமூகவியல் பாடத்தில் பட்டம் பெற்றவரென்றும்.

5. அபேட்சகர் பின்வரும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காட்டுமாறு கேட்கப்படும்போது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு** :—சமய தீட்டைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டா) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை யுடைய சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, அவற்றில் ஒன்று கல்வி அதிபரினால் அல்லது வித்தியாலயத்தின் அதிபரினால் வழங்கப்பட்ட அல்லது சர்வகலாசாலைப் போதகாசிரியரொருவரால் வழங்கப்பட்டதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாசைகளில் தான் பெற்றுள்ள தகுதியைக் காட்டும் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் அணைத்து அனுப்பக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்போது சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பம் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன அவர்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அது சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை அதிகாரசபை என முகவரியிட்டு அனுப்பப்படவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எவருடைய முகவரிக்கும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு உரித்தான நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின முதலாம் பாகத்தில் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றையும் பார்க்கவும்.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அஞ்சல் அட்டையை (" ஆ " எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பி, திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களுடைய விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைகளுக்கு அமைய ஒழுகாதவர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் அறிவிக்கப்படாவிடில் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டுக்கு அமைய ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தை கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவுமுடையவராகார்.

டீ. ஆர். எஸ். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 22 ந் திகதி.

8-1436/3—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

இல : AB/87/X. 2137/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : விவசாய விஞ்ஞான I ந் தர விரிவுரையாளர் பதவி அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல்**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள " ஹாடி " கிரேட்ட தொழில் நுட்ப நிலையத்தில் விவசாய விஞ்ஞான I ந் தர விரிவுரையாளர் பதவிக்கு அல்லது இப் பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.9.12.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.9.17.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அந்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விணணப்ப படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்கரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அநாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும் :**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு—ரூ. 8,880—480—13,200 வருடாந்தம். (ரூ. 11,280 இல் இரண்டு வருடங்கள் தங்கலும் ரூ. 11,760 இற்கு முன் வினைத் திறமைகாண் தடையும்)

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ந் திகதியன்று 30 வய துக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் விவசாயத்தில் வழங்கப்படும் I ஆம் அல்லது II ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டம்.

(ஈ) விவசாய விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகை மைகள்.

(உ) அரசாங்க நிலையம் அல்லது கூட்டுத்தாபனம் அல்லது அங் கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட நிலையம் ஒன்றில் 5 வருட படிப் பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் அல்லது இவற்றில் எவையேனும்

(ஊ) சிங்களத்தில் படிப்பிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது பதவிக்கு நியமிக்கப்படும் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

5. **பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும் :—**

(i) மேற்படி 4 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வராவிடின், இப் பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் எவராவது இல்லா விடின, பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பினவரும் தகைமைகளையுடையவரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர் தூக்கப்படும் :—

(அ) **வயது.**—1969.9.12 அன்று 28 வயதுக்குக் குறையாதவ ராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் விவசாயத்தில் வழங்கப்படும் I ஆம் அல்லது II ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டம்.

(இ) அரசாங்க நிலையம் அல்லது கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட நிலையம் ஒன்றில 5 வருட படிப்பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் அல்லது இவ்விரண்டில் எதுவேனும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் வெளி தேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப் பணமளிக்கப்படும்.

(iii) தெரிவு செய்யப்பட்டவர் வெளி தேசத்தில பயிற்சி பெற நேரிடின், அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுள், குறித்த பயிற் சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்தி கரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த தரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும்,

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமை வாக நடக்கத்தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப் பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினால் அல்லது இரண்டினாலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாக சம்பளம், சகாயப்பணங்கள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் விவசாய விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் தகைமைகளைப் பெறவேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில, அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களின் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்ஞானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர் தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப் பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விணணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதிக்கு அல்லது அதற்குமுன் செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர் புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரி யிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேணடும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற் றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழு காத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப் படமாட்டா. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விணணப்பம் பெற் றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல் பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஓகஸ்து மீ 22 ந வ.

8–1436/4—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

## இலங்கை அரச வான்படை—இலங்கை அரச வான்படை (பொதுக் கடமைக் கிளை) யில் பயில் இளவல் நிலைகள் (வலவர்கள்)

மூன்று பயில் இளவல் நிலையினர்களை வலவர்களாகப் பயிற்சியளிப்பதற்கான விண்ணப்பங்கள் அரச வான்படையினால் கோரப்படுகின்றன.

2. தெரிவு செய்யப்படுவோர் தமது பயிற்சிக் காலத்தைப் பூர்த்தி செய்தவுடன் இலங்கை அரச வான்படையில் ஆணைபெறாத வலவர் உத்தியோகத்தர்களாகச் சேர்க்கப்படுவர்.

3. அபேட்சகர்கள் தமது பறத்தற் பயிற்சியை இலங்கையிற் பெறுவர். ஆனால் சேவையின் தேவைகளின்படி காலத்திற்குக் காலம் சிறப்புப் பயிற்சிகளைப் பெறுவதன் பொருட்டு இவர்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படக்கூடும்.

4. வலவர் பயிற்சியைப் பெறுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன்—

(அ) அபேட்சகர்கள் இலங்கை அரச வான்படையில் 12 ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாகப் பணி செய்வதற்கு இரண்டாம் வகுப்பு "ஈ" தர விமான நுண்பணியாளர்களாகப் பதிவு செய்யுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) வான்படை தளபதியின் ஆலோசனையுடன் பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் இலங்கை அல்லது வெளிநாடுகளிலுள்ள இடங்களில் பயிற்சி பெறுமாறு பயிற்சியினர் வேண்டப்படுவர்.

(இ) பயிற்சிக் காலத்தில் பயிற்சியிலுள்ளவர்களின் நிலைவிமான நுண்பணியாளர்களின் தரத்தில் இருக்கும் ; அத்துடன் அவர்கள் வான்படைச் சட்டத்திற்குட்படுபவர்களுமாவர்.

(ஈ) உயர்தரப் பறத்தற் பயிற்சியைத் தொடங்கும் வரைக்கும் பயிற்சியினர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு ரூபா 930 வீதத்தில் சம்பளம் வழங்கப்படும். அதன் பின் ஆணைபெறாத உத்தியோகத்தராகப் பதிவு செய்யப்படும் வரை அவருக்குப் பயிற்சியிலுள்ள பயிலுநராக மாதமொன்றிற்கு ரூபா 225 வீதத்தில் சம்பளம் வழங்கப்படும். ஒவ்வொரு தினத்திற்கும் 50 சத வீதத்தில் அவருக்குப் பறத்தல் அறிவுறுத்துரைச் சம்பளம் கொடுக்கப்படும். எனினும், 30 மணித்தியாலம் பறந்துள்ள பயிற்சியினர் பறத்தல் அறிவுறுத்துரைச் சம்பளமாக தினமொன்றிற்கு ரூபா 2 வீதத்தில் பெறுவர். இந்தப் பறப்பில் 20 மணித்தியாலம் ஜெட் விமானத்தில் செய்யப்படல் வேண்டும்.

(உ) பயிற்சிக் காலத்தில் பயிற்சியிலுள்ள பயில் இளவல்களுக்கு வான்படை உண்டிச்சாலையில் இடவசதியும் உணவு, கோலவுடை, மருத்துவச் சிகிச்சை என்பனவும் அரசாங்கச் செலவில் அளிக்கப்படும். விடுதலையில் இருக்கும்பொழுது வாழ்க்கைச் செலவுப்படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் கொடுக்கப்படும்.

(ஊ) (i) பயிற்சியிலுள்ள போது பயில் இளவலொருவர் தாமாகவே தமது அபேட்சகர் நிலையை முடிவுறுத்துமிடத்து பெற்றார் அல்லது பாதுகாவலர் அத்தகைய பயில் இளவலின் கணக்கில் அக்காலம் வரை இலங்கை அரசாங்கத்தினால் செலவழிக்கப்பட்ட செலவுகளை மீளளிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவர்.

(ii) பயிற்சி நெறிக்காலத்தில் எந்நேரத்திலாவது அதிகாரிகளினால் பயில் இளவல் துர்நடத்தை காரணமாக அல்லது தமது கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிறகாரணங்களின் நிமித்தம் பயிற்சிக்குத் தகுதியற்றவரென அறிவிக்கப்பட்டால் அவருடைய பெற்றார் அல்லது பாதுகாவலர் அவரின் கணக்கில் இலங்கை அரசாங்கத்தினால் செலவழிக்கப்பட்ட செலவுகளை மீளளிக்குமாறு வேண்டப்படுவர்.

(iii) பயிற்சிக் காலத்தில் பயில் இளவல் தமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் நிமித்தம் பறத்தற் பயிற்சிக்குத் தகுதியற்றவராகவிருந்தால் அத்தகைய பயில் இளவல் சேவையிலிருந்து விலகுவதற்கு அல்லது விமான நுண்பணியாளராகத் தமது தொடக்கத் தொழிலில் இருப்பதற்கான விருப்பத் தேர்வு உரிமையுடையவராவார். அத்தகைய பயில் இளவலை அவர் தகுதியானவரெனக் கருதப்படும் தொழிலுக்கு மீளவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(எ) மேலேயுள்ள உபபந்தி (ஊ), (1), (2) சம்பந்தமாக, இந்த அறிவித்தலின் பின்னிணைப்பு "அ" வில் காணப்படும் விண்ணப்பத்தின் 22 ஆம் கூட்டில் கொடுக்கப்பட்டுள்ள விதத்தில் பிரகடனங்களைப் பெற்றார், அல்லது பாதுகாவலர் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் பெற்றார் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்திலுள்ளபடி இந்த அபேட்சகர்களின் நியமனத்திற்கு முன் இலங்கை அரசாங்கத்துடன் முறியொன்றை நிறைவேற்ற வேண்டும்.

(ஏ) பயிற்சி முடிந்தபின் பயில் இளவல்கள் ஆணைபெறாத வலவர் உத்தியோகத்தர்களாகப் பதிவு செய்யப்படுவர். ஆணைபெறாத வழிகாட்டி உத்தியோகத்தர்கள் சார்ஜனாக நான்கு ஆண்டுகள் திருத்திகரமான சேவை செய்தபின் பறத்தற் சார்ஜனாக உயர்ச்சி பெறுவதற்குத் தகவுடையவராவர். பறத்தற் சார்ஜன் நான்கு ஆண்டுகள் திருத்திகரமான சேவை செய்தபின் வழிகாட்டி உத்தியோகத்தர்களாக உயர்ச்சி பெறுவதற்குத் தகவுடையவராவர். ஆணைபெறாத வழிகாட்டி உத்தியோகத்தரொருவர் தமது பறத்தற் பணிக் காலத்தில் ஆணை வழங்குவதற்குக் கருதப்படக் கூடும்.

### சம்பளமும் படிகளும்—இலங்கை அரசவான்படை.—

5. இலங்கை அரசவான்படையின் சேவை நிபந்தனைகள் 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆந் திகதியிட்ட 10,240 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் விதிக்கப்பட்ட இலங்கை அரசவான்படை (நிலையான, நிலையான ஒதுக்கு) ஒழுங்கு விதிகளின் படியும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களின் படியும் இருக்கும். சம்பளமும் படிகளும் இலங்கை அரசவான்படையின் 1961 ஆம் ஆண்டின் சட்டக் கோவையின் நிபந்தனைகளின் படி கொடுக்கப்படும். அவை பின்வருமாறு :—

| (அ) ஆணைபெறாத உத்தியோகத்தரின் சம்பளம் | | ரூ. | ச. | பறத்தற் சம்பளம் | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|
| சார்சன் .. | மாதமொன்றிற்கு | 247 | 50 | நாளொன்றிற்கு | 8 | 0 |
| பறத்தற் சார்சன் | மாதமொன்றிற்கு | 285 | 0 | நாளொன்றிற்கு | 8 | 89 |
| ஆணைபெற்ற உத்தியோகத்தர் .. | மாதமொன்றிற்கு | 325 | 0 | நாளொன்றிற்கு | 9 | 97 |

### (ஆ) பிறபடிகள்.—

வாழ்க்கைச் செலவுப் படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் வாடகைப்படியும் அரசாங்க வீதங்களில் கொடுக்கப்படும்.

6. உள்ளூர்க் காலநிலை, இடை வெப்பக்கால நிலைகளுக்கான (தேவையைப் பொறுத்து) கோலவுடை சேவையினால் வழங்கப்படும்.

### சேவை நிபந்தனைகள்.—

7. ஓய்வூதியங்கள்/கொடை 1962 ஆம் ஆண்டு செத்தெம்பர் 14 ஆம் தேதியிட்ட 13,301 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 1962 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதியங்கள், கொடைகள் சட்டக் கோவையின் நியதிகளின் படியும் காலத்துக்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களின் படியும் கொடுக்கப்படும். முடியின் கீழ் அல்லது இலங்கைப் பாதுகாப்புப்படை அல்லது பிரித்தானியப் பொது நலவரசின் பிற எந்தவொரு படைக்கலச் சேவையின் கீழ்ப்பட்ட முந்திய சேவை ஓய்வூதியத்திற்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

8. தனிப்பட்ட ஆணை பெறாத உத்தியோகத்தர்கள் உண்டிச் சாலையிலே வசிப்பர். அவர்களுக்கு தளபாடங்களுடன் கூடிய இட வசதியும் உணவும் அளிக்கப்படும்.

9. திருமணமான ஆணைபெறாத உத்தியோகத்தர்களுக்கு தளபாடங்களுடன் கூடிய இடவசதி கிடைக்கக் கூடியதாகவிருக்கும் போது அளிக்கப்படும்.

10. வான்படை ஆளணியினர் உலகின் எப்பாகத்திலும் எந்நேரத்திலும் பயிற்சிக்காக அனுப்பப்படக் கூடியவராவர்.

11. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஆட்சிமொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதன் பொருட்டு ஏற்கனவே செய்யப்பட்டுள்ள விதிகளுக்கு அல்லது இதனபின் செய்யப்படும் விதிகளுக்கமையுமாறு வேண்டப்படுவர்.

12. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் விதவை, அநாதர் ஓய்வூதிய நிதிக்குத் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4 வீதத்தைக் கழிப்பதற்கு சம்மதக் கடிதமொன்றை அளிக்குமாறு வேண்டப்படுவர்.

### வேண்டப்படும் அடிப்படைத் தகைமைகள்.—

13. பின்வரும் தகைமைகளையுடைய அபேட்சர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(அ) தேசிய இனம்.—அபேட்சர்கள் இலங்கையர்களாக விருத்தல் வேண்டும். அதாவது.

(i) பரம்பரையாக அல்லது

(ii) பதிவு மூலமாக இலங்கைக் குடியாக விருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.—17.9.1969 ந் தேதியன்று அபேட்சகர்கள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 24 வயதுக்கு மேற்படாதவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

(இ) **கல்வி.**— கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண தரம்) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஆங்கிலம், சிங்களம், பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களை உள்ளடக்கி ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். ஆனால் பாடங்களில் திறமைச் சித்தியடைந்துள்ளவர்களுக்கு அல்லது உயர் கல்வித் தகைமையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (அபேட்சகர் இறுதித் தெரிவுக்கு முன உத்தியோகத்தர் தர, நுண்ணறிவுப் பரீட்சைகளுக்கு உட்படுமாறு வேண்டப்படுவர்.)

(ஈ) **சிவில் நிலை.**— அபேட்சகர்கள் திருமாணமாகாதவர்களாக விருத்தல் வேண்டும். (எந்தவொரு பயில் இளவலும் பயிற்சியிலுள்ள போதும் பயிற்சி முடிந்து இரு ஆண்டுகள் முடியும் வரைக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்).

(உ) **மருத்துவத் தரம்.**—அபேட்சகர்கள் வானபடை மருத்துவத்தரங்களுக்கு அமைந்தவர்களாக விருத்தல் வேண்டும். (மிகக் குறைந்த உயரம் 5 அடி 5 அங். மார்பு 34 அங். நிறை 105 இரு.)

**பறத்தல் உளச் சார்புப் பரீட்சைகள்.**—

இறுதித் தெரிவிற்கு முன் பறத்தல் உளச் சார்புக்கான வான்கொண்டேகு பரீட்சைகளுக்கு உட்படுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படுவர்.

**விண்ணப்பகாரர்களுக்கான அறிவுறுத்துரைகள்.**—

**14.** வலவர்கள் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலின் அட்டவணை ‘ அ ’ வில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரதியொன்றில எழுதப்பட்டு வான்படை ஏவுநர், அஞ்சற்பெட்டி 594, கொழும்பு என்ற முகவரிக்கு 17.9. 1969, தேதி மத்தியானம் 12 மணிக்குப் பிற்படாமல் சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் கடிதவுறையில் “ விண்ணப்பம்– (வலவர்) பயில் இளவல் நிலைகள் ” என்று குறிப்பிடப் படவேண்டும்.

**15.** விண்ணப்பங்களுடன் இரு குணச் சான்றிதழ்கள் அனுப்பப்படல் வேண்டும். இதில ஒன்று விண்ணப்பகாரரைக் டந்த ஓராண்டுக் காலம் தனிப்பட்ட வாழ்வில் தெரிந்துள்ள முதிர்ச்சி பெற்ற வயதுடைய ஒருவரிடமிருந்து பெறப்படல வேண்டும். மற்றையது அவர் இறுதியாகப்படித்த பள்ளிக்கூடத்தின் அதிபதியிடமிருந்து பெறப்பட்டதாக விருத்தல் வேண்டும். இச் சான்றிதழிலில் அதிபர் விண்ணப்பகாரர் கல்வி, உடற்பயிற்சி விளையாட்டுகளில் பெற்ற பெறுபேறுகளைக் குறித்தல் வேண்டும்.

**16.** விண்ணப்பத்திலுள்ள ஏதாவது கூற்று சரியற்றதெனக் காணப்பட்டால் அது விண்ணப்பகாரரின் மீது 1949 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் செய்சட்டங்களின் ஏற்பாடுகளின்படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளாக்கும்.

**17.** விண்ணப்பகாரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது கல்விச் சட்டக் கோவைகளின் நோக்கங்களின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

(ii) மேலேயுள்ள 15 ஆம் பந்தியில் குறிப்பிட்ட நற்சான்றிதழ்கள்.

**முக்கிய குறிப்பு :**—

இந்தச் சான்றிதழகளினதும் நற்சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது மட்டுமே சமர்ப்பிககப்படல் வேண்டும்.

**18.** விண்ணப்பகாரரொருவருக்கு விதப்புரை வழங்குவதற்கு விரும்பும் எவராவதொருவர் அவருக்கு நற்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலமே அதைச் செய்தல் வேண்டும். அபேட்சகரொருவரின் தெரிவின் பொருட்டு எந்தவிதமான ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பெறுவதற்கான முயற்சி அந்த அபேட்சகரின் தகைமையை நீக்கும்.

**19.** விண்ணப்பம் பெறப்பட்டவுடன் 13 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தேவையான தகைமைகள் உடையவராயும் தகுதியுடையவராயும் காணப்பட்டால் அவருக்குத் தமது சொந்தச் செலவிலேயே தெரிவுச் சபையொன்றின் முன் குறிப்பிட்ட இடத்திலும் தேதியிலும் நேரத்திலும் தோற்றுமாறு அறிவுறுத்தப்படும்.

**20.** இச்சபையினால் தெரிவுசெய்யப்பட்டோர் கல்விப் பரீட்சையொன்றிலும் (13 ஆம் பந்தியைப் பார்க்கவும்) மருத்துவப் பரீட்சையொன்றிலும் பறத்தல் உளச்சார்பு பரீட்சைகளிலும் அபேட்சகரொருவரின் தகுதியை மதிப்பிடுவதற்குத் திட்டமிடப்பட்ட பிற எந்தவொரு பரீட்சையிலும் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். இந்தப் பரீட்சைகள் முதலியவற்றின் தொடர்பாக அபேட்சகர்கள் செலவழித்த செலவுகள் அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டாது.

**21.** இறுதித் தெரிவு பதுகாப்பு, வெளிநாட்டலுவல் அமைச்சினால் நியமிக்கப்படும் சபையொன்றினால் செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுககு அத்தெரிவு பற்றிச் சபையினால் அறிவிக்கப்படும். அதன்பின் விரைவில் அவர்கள் தங்களுடைய பயில் இளவல் நிலைத் தொடர்பில் முறியிலும் உடன்படிக்கையிலும் கையொப்பமிடுமாறு வேண்டப்படுவர்.

**விண்ணப்பப் படிவங்களை நிரப்புதல்.**—

**22.** இந்த அறிவித்தலின் பினனிணைப்பு “ அ ” வில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் சாதாரண அளவுள்ள ஒரு முழுத்தாளில் பிரதி பண்ணப்படல் வேண்டும். எல்லாக் கூடுகளும் தெளிவான தனிப்பேரெழுத்துக்களில் அல்லது தட்டச்செழுத்துக்களில நிரப்பப்படல் வேண்டும். எந்தக் கூடுகளும் வெற்றிடமானதாகவோ அல்லது கிறப்பட்டோ இருத்தலாகாது. இரண்டு அங்குல வெற்றிடமொன்று அலுவலக உபயோகத்தின் பொருட்டு விண்ணப்பத்தின தலைப்பில விடப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் முதலில் வைக்கப்பட்டு விண்ணப்பத்தின் எல்லாப் பக்கங்களும் ஒன்றாக இணைக்கப்படல் வேண்டும்.

என். ஆர். அமரசேகரா,
வான்படைத்துணை மார்ஷல், வான்படை
ஏவுநர்.

வான்படைத் தலைமைக் காரியாலயம்,
அ. பெ. 594,
கொழும்பு,
69.8.13

பின்னிணைப்பு—அ

## இலங்கை அரச வான்படையில் வலவர் பயிற்சிக்கான விண்ணப்பம்

**சொந்த விபரங்கள்.**

1. குடும்பப் பெயர் :————. பிறபெயர்கள் :————.

2. தற்போதைய முகவரி :————.

3. (i) தொலைபேசி இலக்கம் :————.
(ii) மிக அண்மையிலுள்ள புகைவண்டி நிலையம் :————.
(iii) மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :————.
1. தந்தி அலுவலகம். :————.
3. நிரந்தர வசிப்பிடம் :————. இங்கு எவ்வளவு காலமாக வசிக்கிறீர் ? :————.

4. திருமணம் பற்றிய நிலை :————.

5. பெற்றோர் பற்றிய விபரங்கள் :—
(அ) தந்தையாரின் பெயர் :————.பிறந்த இடம் :————.
பிறப்பின் போதுளள குடிமை :————.
(ஆ) தாயாரின் பெயர் :————. பிறந்த இடம் :————
பிறப்பின போதுள்ள குடிமை :————.

6. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை நெறி :————.
(அ) பள்ளிக்கூடங்கள் :————. சேர்ந்த தேதி. :————.
விலகிய தேதி :————. முதலியவற்றின் பெயர்கள்.

7. பள்ளிக்கூடத்திலிருந்து விலகியபின் செய்த தொழில் விபரங்கள் :——.
(இது பூரணமான பதிவாக இருத்தல் வேண்டும்)
(அ) பணிகொள்வோரின் பெயர் (ஆ) தொழிலின் தன்மை (இ) தொழில்செய்தகாலம். :————.
இதற்கு முன் ஏதாவது படைக்கலச் சேவைகளிலுள்ள ஏதாவது பதவிக்கு நேர்முகப் பரீட்சை செய்யப்பட்டுள்ளீரா ? விடை “ ஆம் ” எனில் விண்ணப்பம் செய்துள்ள பதவிகள், தேதிகளின் விபரங்களைத் தருக :————.

9. நீர் ஒரு சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? விடை ‘ ஆம் ’ எனில் அதைப் பற்றிய விபரங்களைத்தருக :————.

10. உம்முடைய கல்வித்தகைமைகள் (பாடங்களின் விபரங்களுடன்) :——

11. பிறந்த தேதி :————. வயது :————. பிறந்த இடம்:————
பிறப்பின்போதுள்ள குடிமை :————. தற்போதைய குடிமை :————.

12. (அ) உயரம் : அடி :————. அங :————.
(ஆ) மார்பு :————. அங். (இ) நிறை :———— இரு.

13. கூடுதலான தகைமைகள் :————.
விண்ணப்பகாரர்கள் பின்வருவனவற்றில் செய்துள்ள உரிமைக் கோரிக்கைகளை எண்பித்தல் வேண்டும் :————.

14. விளையாட்டுகளில் பெற்ற பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் :————
(விளையாட்டுக் குழுமங்கள், போட்டிகள் பற்றிய விபரங்களையும் எய்திய தரத்தையும் குறிப்பிடவும்.)

15. பளளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஈட்டிய புற சாதனை கள் :————.

16. எதாவதொரு படைக்கலச் சேவையில் (ஒழுங்கான படை அல்லது தொண்டர் படை) அல்லது சிறுவர் சாரண அமைப்புகளில் செய் துள்ள சேவையின் விபரங்கள் :————.

17. எதாவது சிறப்புத் தகைமைகளின் விபரங்கள் :————.

18. இந்த விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளடக்கங்கள் (பிரதி கள் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்). :————.

19. நறசான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்கள் :————.

20. இந்த விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற உள்ளடக்கங்கள் :————.

21. விண்ணப்பகாரரினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதியுரை : மேலேயுள்ள கேள்விகளுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய மட்டும் சரியானவை யென்றும் எனது கௌரவத்தின் மீது ஆணையிட்டு உறுதிப்படுத்துகிறேன். இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதன்படிக்கு இலங்கை அரச வான் படையில் பயில் இளவல் நிலைக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடைமுறையை நான் படித்து விளங்கிக் கொண்டேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி. :————.

22. விண்ணப்பகாரரின் பெற்றாரினால்/பாதுகாவலரினால் கையொப்பமிடப் பட வேண்டிய பிரகடனம்.-

(அ) நான் இலங்கை அரசாவான்படையில் பயில் இளவல் நிலைக் கான விண்ணப்பகாரரும் மேலேயுள்ள விண்ணப்பப்படிவத் தின் 21 ஆம் கூட்டில் கையொப்பமிட்டுள்ளவருமாகிய.......... ன் பெற்றார்/பாதுகாவலர்.

(ஆ) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பகாரர் பயிற்சிநெறிக் குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் பின் வருவனவற்றிற்குப் பொறுப்பாக விருப்பதற்கு இத்தால் பொறுப்பேற்றுக்கொள் ளுகிறேன் :————.

(i) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பகாரர் பயிற்சிக் காலத்தில் தாமாகவே பயிற்சியிலிருந்து விலகினால் அக்காலம் வரைக்கும் இலங்கை அரசாங்கத்தினால அவரின் கணக்கில் செலவழிக்கப்பட்ட எல்லாச் செலவுகளையும் மீளளிப்புச் செய்தல்.

(ii) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பகாரர் அதிகாரி களினால் (துர்நடத்தை காரணமாக அல்லது அவருடைய கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிற காரணங்களின் நிமித்தம்) சே வையில் வைத்திருப்பதற்கு தகுதியற்றவரென அறிக்கை செய்யப்பட்டால் அவரின் கணக்கில் இலங்கை அரசாங்கத்தி னால் செலவிழிக்கப்பட்ட எல்லாச் செலவுகளையும் மீளளிப்புச் செய்தல்.

————,
தேதி :————. பெற்றாரின் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்.

பெயர் :————.
(தனிப்பேரெழுத்துக்களில்)

முகவரி :————.

சாட்சிகளின் கையொப்பம் :————.

பெயர் :————.
(தனிப்பேரெழுத்துக்களில்)

முகவரி :————.

8–1473—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## சட்ட வரைநர் திணைக்களம் (மொழிபெயர்ப்புப் பிரிவு)

### I ஆந் தர மொழிபெயர்ப்பாளர் பதவி (தமிழ்)

சட்ட வரைநர் திணைக்களத்தின் (மொழிபெயர்ப்புப் பிரிவில்) உள்ள முதலாந்தர மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) பதவிகள் மூன்றுக்கு, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம், கீழ்த்தரப்பட்ட படிவத்திலமைந்ததாயிருத்தல் வேண்டுவதுடன் 30.9.1969 அன்று அல்லது அதற்கு முன்னர் எமக்கு வந்து சேருதல் வேண்டும்.

2. **தெரிவுசெய்யும் முறை.**—விண்ணப்பகாரர்கள் எழுத்திலான தேர் வொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். அத்துடன் தெரிவுச்சபை யொன்றினாலான நேர்முகத் தெரிவின் பின்னர் தெரிவுசெய்யப்படுவர்.

3. **சேவை நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடை யதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் மூன்றாண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையிலிருப்பர்.

4. **பணிகள்.**—அலுவலரின் பணிகள், ஆங்கிலத்திலுள்ள சட்டவாக்கங் களையும், வரைவுச் சட்டவாக்கங்கள் முதலியவற்றையும் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தல் ஆகும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 3,900 தொடங்கி ரூபா 180 கொண்ட எட்டு ஆண்டுச் சம்பள உயர்வு களும் ரூபா 240 கொண்ட ஐந்து ஆண்டுச் சம்பள உயர்வுகளுமாக ரூபா 6,540 வரை. ரூபா 5,340 இன் முன்னர் திறமைத்தடை ஒன்று செயற்படும்.

6. **வயதெல்லை.**—விண்ணப்பகாரர்கள், 30.9.69 அன்று 21 வயதுக்குட் படாதவராயும், 45 க்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். இவ் வயதெல்லை எற்கனவே பகிரங்க சேவையிலுள்ளவர்களுக்கு ஏற்புடைய தாகாது.

7. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தான்—

(அ) மிகச்சிறந்த நன்னடத்தையுடையவராயிருப்பதுடன் உடல் நல முடையவரெனவும் ;

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின், தமிழினை ஒரு பாடமாகக் கொண்டுள்ள பட்டதாரி என ; (தமிழில் சிறப்புப் பட்டத்தினையுடைய, அத்துடன்/அல்லது ஆங்கிலத்தி லிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் ஆற்றலுடைய ஆட்க ளுக்குத் தெரிவு முதன்மையளிக்கப்படும்) அல்லது ;

(ii) தமிழிற் குறிப்பான திறமை வாய்ந்த வழக்குரைஞர் அல்லது அல்லது வழக்கறிஞர் ஒருவர் என ; அல்லது

(iii) தமிழ் மொழிபெயர்ப்பாளராக ஆகக்குறைந்தது பத்து ஆண்டு அனுபவமுடையவரெனவும் ;

அவர்/அவள் சான்று காண்பித்தல் வேண்டும்.

8. **தேர்வு விழைநர் பின்வரும் ஆவணங்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் காண்பிக்கும்படி பணிக்கப்படுவர்.**—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பி.கு. ஞானஸ்நானச் சான்றிதழ் களோ அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்குரிய ஒழுங்குவிதிக் கோவைகளுக்கென வழங்கிய பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(ஆ) மிகக்கூடிய கல்விச் சான்றிதழ் அல்லது பட்டக்கல்விச் சான்றிதழ்;

(இ) நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (பகிரங்க சேவையிலுள்ள தேர்வு விழைநர்கள் இவ்வுட்பிரிவின்கீழ் சான்றிதழ்கள் காண்பிக்க வேண்டியதில்லை);

(ஈ) உயர்தொழில், அத்துடன்/அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய சான்றிதழ் ;

(உ) தமிழில் தேறிய ஆக உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

9. பகிரங்க சேவையில் நியமனங்கள் வகிப்பவராயும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராயுமுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் அவரவரது திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். நிரந்தர மான அலுவலர்களின் விடயத்தில் நியமனத்துக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர் தமது வேலையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்னும் புறக்குறிப்பினைக் கொண்டிருக்கும் விண்ணப்பங்கள் மட்டுமே கவனிக்கப் படும். விதிக்கப்பட்ட தேதியின் பின்னர் இவ்வலுவலகத்தில் பெறப் படுவனவாய, பகிரங்க சேவையிலுள்ள அலுவலரின் விண்ணப்பங்கள், அவை விதிக்கப்பட்ட தேதியன்றோ அதற்கு முன்னரோ அவரின் திணைக் களத் தலைவரினால் பெறப்பட்டிருந்து, சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் சுணக்கத்துக்குச் செல்லுபடியாகக்கூடிய காரணம் காட்டி ஏற்கும்படி விதப்புரையளிப்பின்னறி, ஏற்றுக் கவனிக்கப்படமாட்டா.

10. விண்ணப்பங்களும் அவை தொடர்பான ஏனைய கடிதப்போக்கு வரத்துக்களும் " சட்ட வரைநர் அ. பெ. 554, கொழும்பு 12 " என முகவரியிடப்பட வேண்டுமேயொழிய அலுவலர் எவர்க்கும் அனுப்பப் படலாகா.

11. **சேவை நிபந்தனைகள்.**—அரசமொழிக் கொள்கையின் நோக்கங்களுக்கெனப் பகிரங்கசேவையிற் புதியதாகச் சேர்ந்தவர் ஒருவராயின்—

(அ) (i) அவர் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(ii) அவர் தகுதிகாண் காலத்தில் சிங்களத்தில் தகுதிபெறல் வேண்டும்.

(iii) தகுதிகாண்கால முடிவில், பிறவற்றுடன் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர் உறுதிப்படுத்தப்படுவர். விதிக்கப்பட்ட காலங்களுள் தகுதிச் சோதனையிற் சித்தியடையத் தவறினால் ஆண்டுச் சம்பளவுயர்வு இடைநிறுத்தப்படும். விதிக்கப்பட்ட காலத்தின் மேலதிகமான ஆறு மாதங்களுள் ஏதேனும் சோதனையில் தேர்ச்சி பெறுவிடின் இடைநிறுத்தம் நிறுத்தமாக மாற்றப்படும். இத்தகைய நிறுத்தம் சோதனை தேர்ச்சி பெறும்வரை செயற்படும்.

(iv) தகுதிகாண் காலத்தின் முடிவில் சிங்களத் தகைமையின் விதிக்கப்பட்ட தரம் எய்தப்படாவிடின் நிருவாக ஒழுங்கு விதிகள் 120, 121 என்பவற்றின் ஏற்பாடுகள், ஏற்புடையனவாகும். "(நிபந்தனைகள் (ii), (iii), (iv) என்பன தமிழ்/ஆங்கில மூலமாகச் சேவையிற் சேர்க்கப்பட்டவருக்கு ஏற்புடையனவாகும்)."

(ஆ) அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இக்கசெற்றின் I ஆம் பாகம் (II) ஆம் பிரிவில் இதழ்முகத்து வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

12. பகிரங்கசேவை ஆணைக்குழுவின் விதிகள், நிதி ஒழுங்குவிதிகள், நடவடிக்கைமுறைக் கைந்நூல் ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் என்பனவற்றுக்கும், காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்படும் வேறெவையேனும் ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகள் என்பவற்றிக்கும் அவர்/அவள் அமைந்தொழுகுதல் வேண்டும்.

13. எல்லா விண்ணப்பங்களும் பெறப்பட்டது பற்றி விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படும் ; முடிவு தேதியிலிருந்து 7 நாட்களுள் அவ்வித அறிவித்தல் பெறாத விண்ணப்பகாரர் எவரும் உடனே சட்ட வரைநர்க்கு அதைத் தெரியப்படுத்தல் வேண்டும். இவ்வறிவிப்புக்கு இணங்கி ஒழுகத் தவறினால், கவனிக்கும்படி கேட்பதற்கு அவருக்குள்ள ஏதேனும் உரிமையை விண்ணப்பகாரர் இழந்தவராவர்.

பேர்சி த சில்வா,
சட்ட வரைநர்.

சட்ட வரைநர் திணைக்களம்,
அ. பெ. 554,
கொழும்பு 12.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**I ஆந் தர மொழிபெயர்ப்பாளர் பதவி (தமிழ்)**
**சட்ட வரைநர் திணைக்களம் கொழும்பு**

1. முழுப்பெயர் :————.
 (அ) குடும்பப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————
 (ஆ) வேறு பெயர்கள் :————
2. அஞ்சல் முகவரி :————
3. பிறந்த தேதியும் வயதும் 30.9.69 அன்று :————.
4. தேசிய இனமும் எவ்விதம் பெறப்பட்டது என்பதும் :————.
5. பிறந்த இடம் :—
 (அ) விண்ணப்பகாரர் :————
 (ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
 (இ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப்பாட்டன் :————
 (ஈ) விண்ணப்பகாரரின் தந்தை வழிக்கொப்பாட்டன :————.
6. திருமணமானவரா, திருமணமாகாதவரா அல்லது தாரமிழந்தவரா/கணவனையிழந்தவரா :————.
7. உமது பொதுக் கல்விக்கென நீர் கற்ற பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும் பெயர்கள் (சேர்ந்த, விட்ட தேதிகளுடன்) :————.
8. கல்விசார்ந்த தகைமைகள், பெற்ற வகுப்பு, தோற்றிய பாடங்கள் எனபவற்றைத் தருக :————.
9. தமிழில் பெற்ற ஆக உயர்ந்த தகைமைகள் :————.
10. மொழிபெயர்ப்பு வேலையிலுமக்குள்ள அறிவும் அனுபவமும் பற்றியமுழு விபரம் :————.
11. பாடசாலை அல்லது கல்லூரி விட்டு நீங்கியபின்னர் பார்த்த தொழில்கள், சேர்ந்த, விட்ட தேதிகள் :————.
12. எவையேனும் சிறப்புரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் :————.
13. உம்மைப்பற்றிய செய்திகள் தரத்தக்கவரும் உம்மை உமது வாழ்க்கையில் நன்கறிந்தவரும், பொறுப்புள்ளவரும், இனத்தவராய் அல்லாதவருமான இருவரின பெயர்களும் முகவரிகளும், பதவிப் பெயர்களுடன் (ஏற்கனவே பகிரங்கசேவையிலுள்ள விண்ணப்பகாரர் விடயத்தில் தேவையில்லை) :————.
14. வேறு எவையேனும் விபரங்கள் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னுற்றரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் சான்றளிக்கிறேன். இதன் கண்ணடங்கியுள்ள எவையேனும் விபரங்கள் பொய்யானவையென அல்லது சரியற்றவையெனக் காணப்படின், அவ்விதம் காணப்படுதல் தேர்வின் முன்னராயின் தகுதியற்றவராக ஆக்கப்படுதற்கும், அத்தவறு கண்டுபிடிக்கப்படுதல் நியமனத்தின் பின்னராயின் எதுவித நட்டஈடுமின்றி வேலைநீக்கஞ் செய்யப்படுதற்கும் நான் ஆளாவேன் என்பதனை நான அறிவேன்.

————.
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

தேதி :————.

8–1335—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி கட்டுபெத்தை, மொறட்டுவ

### முழுநேர அடிப்படையிலான (தற்காலிக) பகுதிநேரப் போதனாசிரியர் பதவிகள்

முழுநேர அடிப்படையிலான (தற்காலிக) பகுதிநேரப் போதனாசிரியர் பதவிகளுக்குப் பின்வரும் பாடங்கள் போதிக்குந் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன.

(1) பொறிமுறை எந்திரவியல்
மின் எந்திரவியல்
குடிசார் எந்திரவியல்
கணிதம்
பௌதிகம்

2. பதவிகள் தற்காலிகமானவையும் குறுகிய கால முன்னறிவித்தலுடன் நிறுத்தப்படக் கூடியனவுமாகும். விண்ணப்பங்கள் கீழ்க் காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு, 15.9.1969 அன்று அல்லது அதற்கு முன் சேரக் கூடியதாக, **பணிப்பாளர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவ** என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

3. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்குப் பின்வரும் வீதத்தில் சம்பளம் வழங்கப்படும் :—

**பொறிமுறை எந்திரவியல் :**

(i) பின்வரும் தகைமையுடன் முழுநேர அடிப்படையிலான (தற்காலிக) பகுதிநேரப் போதனாசிரியராக நியமனம் பெறுபவர்கள் நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 285 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படியும் வாழ்க்கைச் சறப்புப் படியும் பெறுவார்கள்:–

(அ) எந்திரவியலிற் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரிகள் நிறுவனமொன்றின் பிரிவு ஆகியவற்றில் சித்தி

அல்லது

(ஆ) எந்திரவியற் பட்டத்தின் பகுதியில் சித்தி அல்லது இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியின் எந்திரவியல் டிப்ளோமா

அல்லது

(இ) இவற்றுக்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

(ii) பின்வரும் தகைமையுடன் தெரிவு செய்யப்படுவோர் நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 215 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படியும், வாழ்க்கைச் சிறப்புப் படியும் பெறுவார்கள்:-

(அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் மாலைநேர தராதரப் பத்திரம் (பொறிமுறை எந்திரவியல்)

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில் நுட்ப அதிகாரிகள் தராதரப் பத்திரம் (மின்னும் பொறி முறையும்)

அல்லது

(இ) இவற்றுக்குச் சமானமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

**மின் எந்திரவியல் :**

(i) பின்வரும் தகைமையுடன், முழுநேர அடிப்படையிலான (தற்காலிக) பகுதிநேரப் போதனாசிரியராக நியமனம் பெறுபவர்கள், நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 285 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் பெறுவார்கள்:-

(அ) எந்திரவியலிற் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரிகள் நிறுவனமொன்றின் பிரிவு ஆகியவற்றில் சித்தி

அல்லது

(ஆ) எந்திரவியற் பட்டத்தின் பகுதியிற் சித்தி அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் எந்திரவியல் டிப்ளோமா

அல்லது

(இ) இவற்றுக்குச் சமானமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

(ii) பின்வரும் தகைமையுடன் தெரிவு செய்யப்படுவோர் நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 215 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படியும், வாழ்க்கைச் சிறப்புப் படியும் பெறுபவர்கள் :—

(அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் மாலைநேரத் தராதரப் பத்திரம் (மின் எந்திரவியல்)

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில் நுட்ப கல்லூரியின் கனிஷ்ட தொழில் நுட்ப அதிகாரிகள் தராதப் பத்திரம் (மின்னும் பொறி முறையும்)

அல்லது

(இ) இவற்றுக்குச் சமானமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

**குடிசார் எந்திரவியல் :**

(i) பின்வரும் தகைமையுடன் முழுநேர அடிப்படையிலான (தற்காலிக) பகுதிநேரப் போதனாசிரியராக நியமனம் பெறுபவர்கள், நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 285 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் பெறுவார்கள்:-

(அ) எந்திரவியலிற் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்திரிகள் நிறுவனமொன்றில் பிரிவு ஆகியவற்றிற் சித்தி

அல்லது

(ஆ) எந்திரவியற் பட்டத்தின் பகுதி யிற் சித்தி அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் எந்திரவியல் டிப்ளோமா

அல்லது

(இ) இவற்றுக்குச் சமானமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

(ii) பின்வருந் தகைமையுடன் தெரிவு செய்யப்படுவோர் நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 215 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் பெறுவார்கள்:-

(அ) எந்திரவியலில், இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மாலை நேரத் தராதரப் பத்திரம்

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில் நுட்ப அதிகாரிகள் தராதரப் பத்திரம் (குடிசார்)

அல்லது

(இ) இவற்றுக்குச் சமானமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

**கணிதம் :**

(i) பின்வரும் தகைமைகளுடன் முழுநேர அடிப்படையிலான (தற்காலிக) பகுதிநேரப் போதனாசிரியராக நியமனம் பெறுபவர்கள், நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 285 ரூபாவும் வாழ்க்கைச்செலவுப் படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் பெறுவார்கள் :—

(அ) கணிதம் ஒரு பாடமாகவுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டம்.

**பௌதிகம் :**

பின்வரும் தகைமைகளுடன் முழுநேர அடிப்படையிலான (தற்காலிக) பகுதிநேரப் போதனாசிரியராக நியமனம் பெறுபவர்கள், நிலையான அடிப்படைச் சம்பளமாக மாதம் 285 ரூபாவும் வாழ்க்கைச் செலவுப் படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் பெறுவார்கள் :—

பௌதிகம் ஒரு பாடமாகவுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்.

4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், நிறுவனத்தின் சாதாரண வேலை நேரங்களில் (மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.30 மணி வரை) முழுநேரப் பணியாற்றல் வேண்டும். மாலைநேர வகுப்புகளிற் பணியாற்றுதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படலாம்.

5. சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகளிற் போதனை செய்யத்தக்கவர்கள் விரும்பப்படுவார்கள். விண்ணப்பப் பத்திரங்களின் மேற்புறத்திலே விண்ணப்பிக்கும் பாடம் குறிப்பிடப்படல் வேண்டும். சாட்சிப்பத்திரங்களின் மூலப் பிரதி விண்ணப்பங்களுடன் இணைக்கப்படுதல் கூடாது.

எல். எச். சுமனதாசா,
பணிப்பாளர்,
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
கட்டுப்பெத்தை, மொறட்டுவ.

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
கட்டுபெத்தை, மொறட்டுவ,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 22 ந் வ.

## மாதிரிப் படிவம்

**முழுநேர அடிப்படையில் (தற்காலிக) பகுதி நேரப் போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம்**

பாடம் : ————.

1. முழுப் பெயர் : ————.
2. நிரந்தர விலாசம் : ————.
3. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. சாதியம் : ————.
(வம்சாவழியாகவா, பதிவு காரணமாகவா இலங்கையர் என்பதைத் தெரிவிக்கவும்)
5. கல்வித் தகைமைகள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
6. உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் : ————.
(பத்திரங்கள் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
7. விவாகம் செய்தவரா செய்யாதவரா : ————.
8. இற்றைவரை புரிந்துள்ள உத்தியோகங்களின் விபரங்கள் : ————
9. படிப்பித்தல் அனுபவம் : ————.
10. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

————,
கையொப்பம்.

திகதி : ————.

8-1443—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869.

---

## தொழிற் பகுதி

தொழில்முறைப் பயிற்சி நிலையங்களில் பின்வரும் போதனாசிரியர் தானங்களுக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப்பத்திரத்திற் செய்யப்பட்டு 1969.10.12 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்வண்ணம், "தொழில் அதிபர், தொழிற் பகுதி, பௌத்த வாலிப சங்கக் கட்டிடம், (3 வது மாடி), கொழும்பு 1" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) இயந்திர வேலை.

(ii) பற்றவைத்தல்.

2. **சம்பளம்.**—மாதமொன்றுக்குச் சலகைபடிகளுமுட்பட ரூ. 400 முதல் ரூ. 450 வரையான கட்டணம்.

**குறிப்பு.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய உண்மையான கட்டணம், அவர்களின் தகுதிகள், அனுபவம், திறன் ஆகியவற்றை அனுசரித்தே தீர்மானிக்கப்படும்.

3. **ஒப்பந்தத்தின் நிபந்தனைகள்.**—நியமனம், முதலாவதாக தொழில் அதிபரால் தீர்மானிக்கப்படுதற்கமைய, விதிக்கப்பட்ட காலமொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படும். வேண்டுமாயின் ஒப்பந்தக் காலம் பின்னர் நீடிக்கப்படக்கூடும்.

**முக்கிய குறிப்பு.**—தெரிவுசெய்யப்படும் போதனாசிரியர் தமது தொழிலில் மேலும் பயிற்சி பெறும்பொருட்டு இந்தியாவுக்கு அல்லது மற்றும் யாதாயினும் தேசத்திற்கு அனுப்பப்படக்கூடும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—

(i) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டு வருதற்கும், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக மொழியின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்கும் ஏற்கெனவே ஆக்கப்பட்டவையும் இனிமேல் ஆக்கப்படுபவையுமான விதிகளுக்கமைந்தொழுக வேண்டியிருக்கும்.

(ii) தெரிவுசெய்யப்படும் அபேட்சகரொவ்வொருவரும் ரூ. 1,000 ரொக்கத் தொகையைப் பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும்.

5. **வயது வரையறை.**—25 வயதுக்குட்படாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேலெல்லை வயது வரையறை பொருந்தாது).

6. விண்ணப்பதார் பின்வரும் தகுதிகளையுடையராயிருத்தல் வேண்டும் :—

(i) **கல்வித் தராதரங்கள்.**—

(அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உடையராயிருத்தல் வேண்டும் அல்லது பொதுத் தராதரக் கல்வி (சாதாரணமற்ற)ப் பரீட்சையில் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத சமயங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) அதற்குச் சமமான அல்லது மேலான கல்வித் தராதரப் பத்திரம்.

(ii) **தொழில்நுட்பத் தகுதிகள்.**—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் இறுதித் தராதரப் பத்திரம், அல்லது

(ஆ) கல்லோயா அபிவிருத்திச் சபைத் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியின் தகுதித் தேர்வுப் பத்திரம், அல்லது

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழின்முறைப் பயிற்சி ஆசிரியர் இறுதித் தராதரப் பத்திரம், அல்லது

(ஈ) இவற்றிற்குச் சமமான அல்லது மேலான தராதரப் பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட தொழிலில் ஐந்து ஆண்டு செய்முறை அனுபவப் பத்திரம்.

**குறிப்பு.**—விண்ணப்பதாரர்கள், தொழிற் பரிசோதனையொன்றின் பின்னரும் போதித்தலிற் செய்முறைப் பரிசோதனையொன்றின் பின்னரும் தெரிவுசெய்யப்படுவர்.

7. இப்பொழுது அரசாங்க சேவையில் நியமனங்களையுடைய உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவரவர்களது பகுதிகளின் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். தொழிற் பகுதியில் நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படுமிடத்து, விண்ணப்பதாரர்களை சேவையினின்றும் விடுவிக்கச் சம்மதிப்பதாகப் பகுதித் தலைவர்கள் கூறுமிடத்து மட்டுமே அவ்விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்படும்.

8. பின்வரும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப் பத்திரங்களல்ல) விண்ணப்பங்களுடன் இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவத்தாட்சி பத்திரம் (**முக்கிய குறிப்பு.**—ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரம், அல்லது உதவிபெறும் பாடசாலைகளின் ஒழுங்கு விதிக்கோவையின் நோக்கத்திற்காக விநியோகிக்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது).

(ஆ) (i) மிகவுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.
(ii) தொழில்நுட்பக் கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) சமீபத்திற் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்கள் இப்பத்திரங்களை அனுப்பவேண்டியதில்லை).

விண்ணப்பதாரர்கள் தங்கள் மூலப் பத்திரங்களை நேர்முகப் பரீட்சையிற் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் திகதியும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

ரீ. ஆர். ஆர். விஜேவிக்கிரமா,
தொழில் அதிபர்,

**விண்ணப்பப் பத்திரம்**

## தொழிற் பகுதி, தொழின் முறைப்பயிற்சி நிலையங்களில் போதனாசிரியர், தானம்—இயந்திர வேலை/பற்றவைத்தல்

1. முழுப் பெயர் :————.
(தெளிவாக எழுதப்பட வேண்டும்)
2. விலாசம் :————.
3. வயது 1969.10.12 ல் :————.
வருடம் மாதம் நாட்கள்
பிறந்த தேதி : ———— ———— ————
4. பிறந்த இடம் :—
(அ) அபேட்சகரினது :————.
(ஆ) அபேட்சகரின் தந்தையினது :————.
5. எத்தேசத்தவர் ? :————.
6. கல்வித் தராதரங்கள் :————
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
7. (அ) சிங்களத்தில் :————.
(ஆ) தமிழில் :————.
(இ) ஆங்கிலத்தில் :————.
போதிப்பதற்குத் தகுதியுடையவரா ? :————.
8. தொழில்நுட்பக் கல்வித் தராதரங்கள் :————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
9. தொழில் அனுபவம் பற்றிய முழு விபரம் :————.
(அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்குவோரின் பெயர்கள் :————.
11. மற்றும் விபரங்கள் :————.

————————
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

**குறிப்பு.**—பொருத்தமற்றவற்றை நீக்கி விடுக. (விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலினங்களுக்கு விண்ணப்பிப்பாராயின் அத்தகைய தொழிலொவ்வொன்றிற்கும் தனித்தனியே விண்ணப்பித்தல் வேண்டும்).

8–1437—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## வித்தியா பகுதி

### புற விரிவுரையாளர் பதவிகள்—கனிட்ட தொழில்நுட்ப நிலையம், கேகாலை—1969/70 ஆம் ஆண்டு

கேகாலை, கனிட்ட தொழில்நுட்ப நிலையத்திலுள்ள புற விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு, பதிவஞ்சல் மூலம் " அதிபர், கனிட்ட தொழில்நுட்ப நிலையம், கேகாலை " என்ற விலாசத்துக்கு 12.9.69 அன்று ந.ப. 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும்.

பின்வரும் பாடங்களிலேயே வெற்றிடங்கள் உண்டு :—

1. சிங்கள மொழி
2. வணிக எண்கணிதம்
3. வணிகப் புவியியல்
4. கணக்குப் பதிவியல்

(1–4: சிங்கள மொழிமூலம்)

5. ஆங்கில மொழி

2. விரிவுரையாளருக்கான கட்டணம் அவர்களுடைய கல்வித் தகைமைகள்/அனுபவம், அவர்கள் படிப்பிக்க வேண்டப்படும் வகுப்புகள் ஆகியவற்றிற்கமைய ரூ. 5/– தொடக்கம் ரூ. 10/– வரை மாறுபடும்.

3. நியமனம் இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகி அடுத்த வருடம் ஓகஸ்ற் மாதம் முடிவடையும் காலத்துக்கானதாகும். அவசியமெனின் ஒருவரின் சேவை முன்னதாகவே நிறுத்தப்படலாம்.

4. 1 தொடக்கம் 4 வரை இலக்கமிடப்பட்டுள்ள பாடங்களிலான வகுப்புகள் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 7.15 மணி வரையும், 5 என இலக்கமிடப்பட்டுள்ள பாடம் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணி வரையும் நடைபெறும். மேலே விதிக்கப்பட்டுள்ள நேரங்களின்போது படிப்பிக்கக்கூடிய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே சீர்தூக்கப்படும்.

5. உள்ளக பரீட்சகர்கள் அல்லாத வேறு பரீட்சகர்கள் அமர்த்தப்பட்டாலன்றி, புற விரிவுரையாளர்கள் தமது வகுப்புகளிலுள்ள மாணவர்களை வருடாந்த இடைமானிப் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சைகளிலும் மேலதிக வேதனமின்றி பரீட்சிக்க வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்கு முன் கேகாலை, கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபரால் பெற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அனுப்பப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. எப்பாடத்துக்கு விண்ணப்பிக்கப்படுகிறதென விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் மிக முக்கியமெனக் கவனிக்கவும்.

பிரதேச வித்தியாதிபதி, கேகாலை.

கல்வி அலுவலகம்,
கேகாலை, 19.8.1969.

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவம்**

**கேகாலை, கனிட்ட தொழில்நுட்ப நிலைய புற போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம்—1969/70 ஆம் ஆண்டு**

1. பெயர் :————.
2. வயது :————.
3. சொந்த விலாசம் :————.
4. தொழில் :————.
5. மாதாந்த அடிப்படைச் சம்பளமும் சம்பள விகிதமும் :————
6. தொழில் புரியும் இடமும் விலாசமும் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. உயர்தொழில் தகைமைகள் :————.
9. படிப்பித்தல் அனுபவம் :————.
10. விண்ணப்பிக்கும் பாடங்கள் :————.

| பாடம் | எம்மொழி மூலம் |
|---|---|
| .................. | .................. |
| .................. | .................. |

11. வாராந்தம் படிப்பிக்கக்கூடிய வகுப்புகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை :————.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் சரியானவையென நான் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

8—1300—29.8.69 ந் திகதிய வர்த்தம் இல. 14,869

---

මහ/සාපා/8/කාව්/49

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**புற போதனாசிரியர் பதவிகள்—தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் 1969—70**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள கண்டி, கேகாலை, அனுராதபுரம், காலி, வதுளை, யாழ்ப்பாணம், குருநாகல், இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலையங்களிலுள்ள புற போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நியமனம் கோரப்படும் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தின் அதிபருக்கு 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். (விண்ணப்பங்கள் ஒன்றும் இவ்வமைச்சுக்கு அனுப்பப்படலாகாதென்றும் அமைச்சுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு இவ்வமைச்சு பொறுப்பு ஏற்காதென்றும் விண்ணப்பதாரிகள் குறிப்பாகக் கவனிக்கவேண்டும்.) கல்வித்தகைமைகள், தொழில் நுட்பத்தகைமைகள், உயர்தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவை பற்றிய சகல விபரங்களையும் அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும்.

2. ஒவ்வொரு தொழில் நுட்ப நிலையத்திலும் எப்பாடங்களில் புற போதனாசியர்களுக்கான காலியிடங்கள் நிலவுகின்றனவென கீழே வெவ்வேறு தொழில் நுட்ப நிலையத்தின் கீழும் முறையே காட்டப்பட்டுள்ளது. வகுப்புகள் நடாத்தப்படும் போதனா மொழி பாடத்தொகுதிகளுக்கெதிரே காட்டப்பட்டுள்ளது.

**கனிட்ட தொழில் நுட்ப நிலையம், கண்டி**

1. ஆங்கில மொழி ..
2. கணிதம் .. ..
3. பௌதிகம் .. ..
4. வணிகப் புவியியல் ..
5. வணிக எண்கணிதம் ..
6. வணிகம் .. ..
7. கணக்கியல் .. ..
8. சுருக்கெழுத்து ..
9. தட்டெழுத்து.. ..
10. மின்தொழில் நுட்பவியல் ..
11. பொறிமுறை வரைதல் ..
12. கேத்திரகணித வடிவமுறை வரைதல்
13. அளவைத் திட்டங்கள் ..
14. அளத்தலும் மட்டம் பார்த்தலும்
15. சுகாதார எந்திரவியல் ..
16. மூலப்பொருளும் அமைப்பும் ..
17. கட்டடப் பொருள்களும் அளவைகளும்
18. கட்டட அமைப்பு ..
19. தொழிற்சாலைச் செலவினக் கணக்கு முறை
20. வெப்பவியல் இயந்திரங்கள் ..
21. பொறிமுறை விஞ்ஞானம் ..

(1—21: ஆங்கில மொழி மூலம்)

22. வணிகப் புவியியல் ..
23. வணிக எண்கணிதம் ..
24. வணிகம் .. ..
25. கணக்கியல் .. ..
26. சுருக்கெழுத்து ..
27. தட்டெழுத்து.. ..
28. மணிக்கூடு பழுது பார்த்தல் ..
29. வேலைக்களப் பயிற்சி ..
30. தச்சுவேலை வரைதல் ..
31. மின்கம்பி இணைத்தல் ..
32. வானொலி பழுதுபார்த்தல் தொழில் நுட்பவியல்
33. வானொலி பழுதுபார்த்தற் தொழில் நுட்பவியல் பயிற்சி ..
34. குழாயமைப்பு தொழில் நுட்பவியல்
35. குழாயமைப்பு தொழில் நுட்பவியல் பயிற்சி

(22—35: சிங்கள மொழி மூலம்)

3. புற போதனாசிரியர்க்கான கட்டணங்கள் அவர்களின தகைமை, அனுபவம், அவர்கள் படிப்பிக்கும் வகுப்புகள் ஆகியவற்றிற்கு அமைய ரூபா 5.00 தொடக்கம் ரூபா 15.00 வரை மாறுபடும்.

4. நியமனம் இவ்வருடம் ஒப்ரோபர் மாதம் தொடக்கம் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரையுள்ள காலத்துக்கானதாகும். அவசியம் ஏற்படின் அவர்களின் சேவை நிறுத்தப்படலாம்.

5. வகுப்புகள் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணிவரையும் பி. ப. 5 மணி தொடக்கம் பி. ப. 7.15 மணி வரையும் நடைபெறும். விதிக்கப்பட்ட இந்நேரங்களில் படிப்பிக்க ஆயத்தமாய் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே சீரதூக்கப்படும். விண்ணப்பதாரிகள் அவர்களுக்குப் படிப்பிக்க வசதியாகவுள்ள நேரத்தை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

6. உள்ளகப் பரீட்சகர்கள் அல்லாதவர்கள் அமர்த்தப்படாத வருடாந்த இடைமானிப் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சைகளிலும் மேலதிக வேதனமின்றி அவர்களுடைய வகுப்புக்களிலுள்ள மாணவர்களை புற போதனாசிப்யர்கள் பரீட்சிக்க வேண்டும்.

7. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பகுதித் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய அதிபர்களால் பெற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள், விண்ணப்பம் உரிய திகதிக்கு முன் பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட தென்றும் தாமதத்துக்குத் தகுந்த காரணம் காட்டப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. எப் பாடம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகிறதென விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் மிகவும் முக்கியமெனக் கவனிக்கவும்.

பீ. வி. இரத்நாயக,
கண்டி மாவட்ட வித்தியாதிபதி.

கல்விக் காரியாலயம்,
கண்டி,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 19 ந் உ.

8—1315—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

## கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### தத்துவ அதிகார பணியாட்கள் வெற்றிடங்கள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பல்வேறு பிரிவுகளிலுள்ள வெற்றிடங்களைப் பின்வருவன குறிப்பிட்டுக்காட்டுகின்றன :—பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு, சாதனப்படுத்துதலும் பிரசுர வெளியீட்டு நிலையமும், முதலீட்டுத் தகவல் நிலையமும், சந்தைப்படுத்துதலும், ஏற்றுமதி மேம்பாடு செய்யும் நிலையமும், அபிவிருத்தி உற்பத்திப் பெருக்க நிலையமும், கைத்தொழிற் தோட்ட முகாமையும், கைத்தொழில் நிதி, கடன்வசதி முகாமையுமாம்.

**பிரதிப் பொது நிர்வாகி**

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பல்வேறு பிரிவுகளையும் முகாமைகளையும், மேற்பார்வை செய்து பரிபாலித்து நிர்வாகிப்பதில் உதவுவதற்கு. இதற்கு, இலங்கை நிர்வாக சேவை தரம் 2 அல்லது அல்லது தரம் 3 இல் உள்ள உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கதாயிருக்கும். அல்லது அரசாங்க துறையிலோ தனியார் துறையிலோயிருந்து, சமமான பயிற்சியும் அனுபவமும் கொண்ட பட்டதாரி ஒருவர் விரும்பத்தக்கதாயிருக்கும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேரப்பட்ட ரூபா 1,750—50—2,250—ஆகும்.

**ஏற்றுமதி மேம்பாடு செய்வதற்கும் சந்தைப்படுத்துவதற்கும், அதிபர்**

வர்த்தகத் துறையிலோ அல்லது அதற்கிணைவாயுள்ள துறைகளிலோ, சிரேஷ்ட நிறைவேற்றுப் பதவியில், 12 வருடகாலத்திற்குக் குறையாத அனுபவங் கொண்ட பட்டதாரி.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேரப்பட்ட ரூபா 1,750—50—2,250 ஆகும்.

**உதவி அதிபர்கள்**

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பல்வேறு பிரிவுகளிலும் பதவிப் பொறுப்பேற்பதற்கு நிர்வாகப் பதவிகளில் குறைந்த பட்சம் 10 வருட அனுபவங் கொண்ட பட்டதாரிகள் தேவைப்படுகின்றனர். பொருளாதார ஆராய்ச்சி, வர்த்தகம், அல்லது கைத்தொழில் நிர்வாகம், ஆதியனவில் அனுபவங்கொண்டுள்ளவர்கள் விரும்பத்தக்கதாயிருக்கும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 720 விருந்து 1,750 வரையாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தத்துவ அதிகார பதவிதரம் 3, 4, 5 இல் விதிக்கப்பட்டுள்ளவாறு.

**நிர்வாகமும் அபிவிருத்தி உற்பத்திப்பெருக்க நிலையமும்**

குறித்த இப்பிவிரின் பல்வேறு பகுதிகளிலும் பின்வரும் பதவிகள் பெற வாய்ப்புண்டு.

**பொது நிர்வாகம்—இடைநிரற்பதவி**

ஒரு சர்வகலாசாலைப்பட்டம் பெற்றபின், ஒரு சிரேஷ்ட நிறைவேற்று பதவியில் குறைந்த பட்சம் 8 வருடகால அனுபவங்கொண்டுள்ளவராயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூபா 1,250—50—1,750 ஆகும்.

**கைத்தொழிற் பொறியியலாளர்—சிரேஷ்ட பதவி**

தொழிற்பாத்திப இறுதித் திறமை படைத்த (சாட்டட் புறபெஷன்ஸ்) தகைமையோடு கூடிய பொறியியலில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையால் பொறியியனுக்கென வழங்கப்பட்ட பட்டமும், பட்டம் பெற்றபின், ஒரு நிறைவேற்றுப் பதவியில் 8 வருடகால அனுபவமும் கொண்ட பொறியியலாளராயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர 1,500—50—2,000 ஆகும்.

**இடைநிரற் பதவி**

ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையால் பொறியியனுக்கென வழங்கப்பட்ட பட்டமும், பட்டம் பெற்றபின் அத்துறையில் 5 வருடகால செயல் முறை அனுபவமும் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 1,250—50—1,750 ஆகும்.

**கனிஷ்ட பதவி**

ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையால் பொறியியனுக்கென வழங்கப்பட்ட பட்டமும், பட்டம் பெற்றபின், 2 வருடகால செயல் முறை அனுபவமும் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூபா 720—50—1,250 ஆகும்.

**கணக்கீட்டு நிர்வாகம்—சிரேஷ்ட பதவி**

கணக்கீட்டுத் துறையில் பூரண தொழிற் தேர்வுத் தகைமையும், தேர்வுபெற்றபின், ஒரு நிறைவேற்று பதவியில் 5 வருடகால தொழில் அனுபவமும் கொண்டவராயுமிருத்தல் வேண்டும்.

**சம்பள விதிதாசாரம்.**—மாதமொன்றிற்கு, எல்லாமாய் ஒருசேர ரூபா 1,500—50—2,000 ஆகும்.

**சந்தைப்படுத்துதலும் விற்பனைகளும்—சிரேஷ்ட பதவி**

ஒரு சிரேஷ்ட நிறைவேற்றுப் பதவியில் குறைந்த பட்சம் 10 வருடகால அனுபவங்கொண்ட பட்டதாரி.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 1,500—50—2,000 ஆகும்.

**ஆளுக்குரிய நிர்வாகம்—இடைநிரற்பதவி**

பட்டதாரி ஒருவர், பட்டம் பெற்றபின், ஒருநிறைவேற்று நிரல் பதவியில் குறைந்த பட்சம் 8 வருட கால அனுபவங் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூபா 1,250—50—1,750 ஆகும்.

**மேற்பார்வைக்குரிய பயிற்சி—சிரேஷ்ட பதவி**

பட்டதாரி ஒருவர், பட்டம் பெற்றபின் நிறைவேற்று நிரல் பதவிகளில் குறைந்த பட்சம் 10 வருடகால அனுபவமும், குறித்த பத்து வருடகாலத்தில், ஒரு கைத்தொழில் நிலையத்தினுள், பயிற்சியில் 3 வருடகால அனுபவமோ, அல்லது, 5 வருடகால அனுபவமோ அல்லது 5 வருடகாலம் தொகுதிகூறு நிர்வாகத்தில் மேற்பார்வையாளர்களை நேரடியாகக்கொண்டு நடாத்திய அனுபவமோ கொண்டவராயிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர், சிங்களத்திலும் தமிழிலுமோ அன்று சிங்களம், அல்லது தமிழிலுமோ பயிற்சி வருப்புகள் நடத்தக் கூடியவராயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**— மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 1,500—50—2,000 ஆகும்.

**கனிஷ்ட பதவி**

பட்டதாரி, ஒருவர், கைத்தொழில் நிறுவனமொன்றினுள், பயிற்சியில் 3 வருடகால அனுபவமோ அல்லது 5 வருடகாலம் தொகுதிக் கூறு நிர்வாகத்தில் மேற்பார்வையாளர்களை நேரடியாகக்கொண்டு நடத்திய அனுபவமோ கொண்டவராயிருத்தல் வேண்டும். விண்ணப்பகாரர் சிங்களத்திலும் தமிழிலுமோ அல்லது, சிங்களத்திலோ தமிழிலோ பயிற்சி வகுப்புகள் நடத்தக்கூடிவராயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 720—40—50—1,250 ஆகும்.

**பிரதம உத்தியோகத்தர், சாதனப்படுத்தல், பிரசுரித்தல் நிலையம்**

பட்டதாரி ஒருவர், பட்டம் பெற்றபின், இத்துறையில் 8 வருடமளவில், அனுபவமுள்ளவராய், நூல் நிலையத் தொழிலிலும் சாதனவெளியீடு தயாரித்தலிலும் பிரசுரிப்பு வேலைகளிலும் தொழிற்றகைமையுள்ளவராயிருத்தல் வேண்டும். அச்சடிப்புத் தொழில் நுட்பமும், பத்திராசிரியத் தொழில் அறிவுகளும் கொண்டவராயிருந்தால், அது மேலதிக தகைமையுள்ளவராகக் கணிக்கப்படும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிக்கு எல்லாமாய் ஒருசேர ரூபா 1,250—50—1,750 ஆகும். அல்லது தகைமை, அனுபவம் ஆதியனவையைப் பொறுத்து மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூபா 1,500—50—2,000 ஆகும்.

**தலைமைப் பத்திராசிரியர்— பிரசுரப் பிரிவு**

பிரசுர அங்கம்,மீளவாய்ந் தெழுதல், கட்டுரை விமர்சனங்கள் எழுதுதல் ஆதியனவுடன் கூடிய, பத்திராசிரியத் தொழிலுக்கு, இத்துறையில் 8 வருட கால அளவான அனுபவங்கொண்ட பட்டதாரியாயிருத்தல் வேண்டும். ஆராய்ச்சியும், நிர்வாக அனுபவமும் கொண்டவராயிருந்தால், அது மேலதிகத் தகைமையுடையவராகக் கணிக்கப்படும்.

**சம்பள விகிதாசாரம்.**—மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூபா 1,250—50—1,750 ஆகும். அல்லது அனுபவத்தையும் தகைமையும் பொறுத்து மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர, ரூ. 1,500—50—2,000 ஆகும்.

**பட்டதாரிப் பயிற்சியாளர் :**

(1) விஞ்ஞானம், பொருளாதாரம், சமூகசாஸ்திரம், வர்த்தகம், பொறியியல், சட்ட நூல் ஆதியனவில் " சிறப்புப் பத்திரங் " கொண்ட பட்டதாரி,

(2) கைத்தொழில், நிர்வாகத்திலும், பொருளாதார ஆராய்ச்சி, வர்த்தகம் அல்லது நிர்வாக அபிவிருத்தி ஆதியனவில் பட்டம் பெற்றபின் 5 வருடகால அனுபவங்கொண்ட பட்டதாரியாயுயிருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதாசாரம்.**—பட்டதாரிப் பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 2 வருடசேவை காலத்திற்கும், மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூ. 500. அதன் பின்பு, மாதமொன்றிற்கு எல்லாமாய் ஒன்றுசேர ரூபா 600—40—1,000 ஆன சம்பள விகிர்தத்தில் நியமிக்கப்படுவ. உயர்ச்சித் தேர்வுப் பட்டம் பெற்ற பட்டதாரிகள், அல்லது விஷேஅனுபவங்கொண்டவர்கள், நேரடியாகவே, ஒரு தகுந்த சம்பள விகிததில் நியமிக்கப்பட இடமுண்டு.

**பத்திரிகை ஆசிரிய உதவியாளர்களும், மொழி பெயர்ப்பாளர்களும்**

ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பிரசுர அங்கம், கட்டுரை விமர்சனம், ஆதிய பத்திராசிரியத் தொழிலில் குறைந்த பட்சம் 5 வருட காலம் அனுபவங் கொண்ட பட்டதாரிகளும், ஆங்கிலத்திலோ, அல்லது சிங்களத்திலோ கைத்தொழில் பொருளாதாரம், அல்லது வர்த்தகம் ஆதியனவில் குறைந்த பட்சம் 5 வருட கால, மொழிபெயர்ப்பு அனுபவங்கொண்ட பட்டதாரிகள் வேண்டப்படும்.

**சம்பள விகிதாசாரம்.**—

மாமான்றிற்கு எல்லாமாய் ஒருசேர, ரூபா 600—40—1,000 ஆகும். அல்லது அனுபவங்களையும் தகைமைகளையும் பொறுத்து மாதமொன் றிற்கு எல்லாமாய் ஒருசேர ரூபா 720—40—50—1,250 ஆகும்.

விண்ணப்ப படிவங்கள் வழங்குவதற்கில்லையாகையால், கீழே, இணைத்திருக்கும் மாதிரிப் படிவத்திற்கியைய, விண்ணப்பிக்குமாறு விண்ணப்பதாரர்கள் தயவாய் வேண்டப்படுகிறார்கள். அரசாங்க சேவை களிலும், அரசாங்க கூட்டுத்தாபனங்களிலிலுமிருந்து வரும் விண்ணப் பங்கள், சம்பந்தப்பட்ட திணைக்கள அதிபர்களால், அல்லது, கூட்டுத் தாபன அதிபர்களால், குறித்த விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப் பட்டால், அவரைத் தத்தம் வேலைகளிலிருந்து விடுவிக்கப்படுமென்ற ஒப்புதற் சான்றுக் குறிப்புடன் அனுப்பி வைத்தால் மாத்திரமே கவனிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி, 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ந் திகதியாகும். விண்ணப்பங்கள் யாவும், பிரதம நிர்வாக உத்தியோகத்தர், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 16, கிரகோரிஸ் வீதி, கொழும்பு 7 என்று விலாசமிட்டு, குறித்த செப்டம்பர் மாதம் 15 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ குறித்த நிர்வாக உத்தியோகத்தர்க்குக் கிடைக்கக்கூடி யவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

**மாதிரிப் விண்ணப்பப் படிவம்**

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பதவிக்கு.

1. முழுப் பெயர் :————.
2. விலாசம் :————.
3. வயது :————.
4. சர்வகலாசாலைக் கல்வித்தரம்/தொழிற்தரம்/தகைமைகள் :————.
5. பட்டம் பெற்ற பின்னைய படிப்புகள் :————.
   ஆராய்ச்சி அனுபவங்கள் :————.
6. தொழில் அனுபவம் (தயவு செய்து தொடர்ச்சியாக பார்த்த வேலை களைத் தேதி வாரியாகத் தரவும்) :————.
7. தற்போதைய சம்பளம் (அடிப்படைச் சம்பளத்தையும், அதற்குரிய படிகளையும் புறம்பாய்க் காட்டுக) :————.
8. எதிர்பார்க்கும் சம்பளம் :————.
9. விண்ணப்பத்தை ஆராய்வதற்குரிய ஏனைய சிறப்புத் தகைமைகள்:—.

————————,
தேதி :————. விண்ணப்பதாரர் கையொப்பம்.

8–1427—29.869 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**விஞ்ஞானப் பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களை சிங்கள மொழிமூலப் பாடசாலைகளிற் சேர்த்தல்**

சிங்கள மொழி மூல அரசினர் பாடசாலைகளில் உதவி ஆசிரியர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து கோரப்படுகின்றன.

2. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆந் திகதி யன்று அல்லது அதற்கு முன்னர் " நிரந்தரக் காரியதரிசி, (பாடசாலை கள் நிருவாகக் கிளை), கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாணய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும். விண் ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் " விண்ணப்பம்—விஞ்ஞானப் பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர் பார்த்திருப்பவர் " எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—ரூ. 1,344—18 × 72—3 × 120–ரூ. 3,000 வருடாந்தம்.

சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆகியவை விதிக்கப்பட்ட விகிதங்களின் பிரகாரம் வழங்கப்படும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும்—

(அ) 20.9.1969 அன்று 45 வயதுக்கு மேற்படாமலும் 18 வயதுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவை யில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின், மேலெல்லை அமையாது).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களாவது பட்டப் பரீட்சைக்கு எடுத்தவராக இருத்தல் வேண்டும் :—
   (i) பௌதிகம் ;
   (ii) இரசாயனம் ;
   (iii) தாவரவியல் ;
   (iv விலங்கினவியல் ;
   (v) தூய கணிதம் ;
   (vi) பிரயோக கணிதம்.

(ஈ) க பொ. த. (சாதாரணதர) ப. வகுப்புகளில் சிங்கள மொழி மூலம் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும். க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் பயிற்சிச் சிங்களத்தில் அல்லது அரசினர் ஊழியர்களுக்கான (iv) ஆந் தரத் தேர்ச்சிப் பரீட்சை யில் சித்தி எய்தியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம்.

(உ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஊ) தீவின் எப்பகுதியிலும் கடமையாற்றுதற்கு ஆயத்தமாயிருப்பது டன் அதற்கான உடல் தகுதி உடையவராயும் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற் றின் பிரதிகளை இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. க. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங் குச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் சிங்கள மொழியில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரமும்.

(இ) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள்—இவற்றுள் ஒன்று விண்ணப் பதாரி வசிக்கும் பிரிவுக்காரியாதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள் ளப்பட்டதாக இருக்க வேண்டும்.

6. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங் கள் அவர்கள் கடமை புரியும் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவிகள் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதி களின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவாகவும் நிரந் தரமானவையாகவும் இருக்கும் ;

(ii) நியமிக்கப்படுபவர் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமிக்கப்படும் ஆண்கள், ஆசிரியர் கைம்பெண் அனுதை இளைப்பாற்றுச் சம்பளநிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும் ;

(iii) நியமிக்கப்படுபவர், ஏற்கனவே அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியில் இல்லா திருப்பின் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக் கப்படுவர். அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிப்பவர் நியமிக்கப் படுமிடத்து அவர் 1 வருட காலத்துக்கு பதில் பதவியாளராக நியமிக்கப்படுவர்.

(iv) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலேனும் கடமையாற்ற வேண்டும்.

(v) நியமிக்கப்படுபவர் அரசினரால் ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக் கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை, குறிப்பாக 1956ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசினர் கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற் பொருட்டு இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைய ஒழுக வேண்டும்.

8. விண்ணப்பங்களும் விண்ணப்பங்கள் தொடர்பான எக்கடிதங் களும் நிரந்தரக் காரியதரிசிக்கே அனுப்பப்பட வேண்டும். இப்பகுதியின் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகா.

9. இச்செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள வையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளையும் விண்ணப்பதாரிகள் கவனிக்க வேண்டும்.

10. விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப் படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்கள் தபாலில் இடப்பட்டபின் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்க்குமுக மாக விண்ணப்பங்களை நேரகாலத்துடன் அனுப்புமாறு விண்ணப்பதாரி களுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

டி. ஜி. தயாரட்ண,
நிரந்தரக் காரியதரிசியும் மகா வித்தி யாதிபதியும்.

பா. நி. 12/320,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு, 1969 ம் ௵ ஓகஸ்ட் ௴ 16 ந் உ.

**(மாதிரி விண்ணப்பப் படிவம்)**

**விஞ்ஞானப் பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களுக் கான உதவி ஆசிரியர் பதவிகளுக்குரிய விண்ணப்பப் படிவம்**

1. முழுப் பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. பால் : ————.
4. விவாகஞ் செய்தவரா செய்யாதவரா : ————.
விவாகஞ் செய்தவராயின் கணவன்/மனைவி அரசாங்க உத்தி யோகத்தரா ? : ————.
(விபரம் தருக)
5. விண்ணப்பதாரி பிறந்த திகதி : ————.
6. பின்வருவோர் பிறந்த இடம் —
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
7. (அ) சாதியம் : ————.
(ஆ) இலங்கையராயின் வம்சாவழியாகவா பதிவு காரணமாகவா ? : ————.
8. கல்வித் தகைமைகள் —
(i) பட்டப் பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவரா ? : ————.
(ii) பட்டப் பரீட்சைப் பாடங்கள் : ————.
(iii) சர்வகலாசாலை : ————.
(iv) வருடம் : ————.
9. சிங்களத்தில் பெற்ற தகைமைகள் : ————.
10. தொழிற் தராதரங்கள் ஏதும் இருப்பின் : ————.
11. முன்னைய உத்தியோகம் : ————.
(i) ஆசிரியராயின்—
(அ) பதிவு இலக்கம் : ————.
(ஆ) சேவை விபரம் : ————.

| பாடசாலைப் பெயர் | இருந்து | வரை | வகித்த பதவி |
|---|---|---|---|
| ———— | ———— | ———— | ———— |

(ii) வேறு அரசினர் உத்தியோகமாயின்—

| வகித்த பதவி | இருந்து | வரை |
|---|---|---|
| ———— | ———— | ———— |

12. ஆசிரியராக/அரசாங்க உத்தியோகத்தராக சேவையை முடித் தல்/நிறுத்தல்/விலகுதல்/விடுவித்தல் ஆகியவற்றிற்கான கார ணம் (முழு விபரங்களும் தருக) :————.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும், நான் அரசினர் சேவையிலிருந்து நீக்கப்படவில்லை அல்லது பதவியை விட்டு நீங்கியதாக என்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நான் வம்சாவழியி னால்/பதிவினால் இலங்கையரெனவும், இத்தீவின் எப்பகுதியிலும் கடமை யாற்றத் தயாராக உள்ளேனெனவும் உறுதிப்படுத்துகிறேன். இத்துடன் இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை யென நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவ ராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்ட ஈடுமின்றி நான் விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

8–1303—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## கல்வித் திணைக்களம்

### புற போதனாசிரியர் பதவிகள்

### தொழில் நுட்பக் கல்வி நிலையம், காலி—1969/70

காலித் தொழில் நுட்பக் கல்வி நிலையத்திலுள்ள புற போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காலித் தொழில் நுட்பக்கல்வி நிலையத்தின் அதிபருக்கு 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். கல்வித் தகைமைகள் தொழில் நுட்பத் தகைமைகள் அனுபவம் ஆகியவை பற்றிய சகல விபரங்களையும் அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும்.

2. எப்பாடங்களில் புற போதனாசிரியர்களுக்கான காலியிடங்கள் நிலவுகின்றனவெனக் கீழே காட்டப்பட்டுள்ளது. வகுப்புக்கள் நடாத்தப் படும் போதனாமொழி பாடத்தொகுப்புகளுக் கெதிரே காட்டப்பட்டுள்ளது.

| பாடம் | போதனாமொழி |
|---|---|
| (1) வணிக எண்கணிதம் | சிங்களமொழி மூலம் |
| (2) கணக்குப் பதிவியல் | |
| (3) கணக்கியல் | |
| (4) உலோக வேலை | |
| (5) ஆங்கிலம் | ஆங்கிலமொழி மூலம் |
| (6) அளத்தலும் மட்டம் பார்த்தலும் கொள்கை | |
| (7) கணிதம் | |
| (8) வணிகப் புவியியல் | |
| (9) கட்டட அமைப்பு | |
| (10) பிரயோகப் பொறி முறையியல் | |
| (11) வெப்பவியல் இயந்திரங்கள் | |
| (12) பொறி முறை வரைதல் | |
| (13) மூலப் பொருளும் அமைப்பும் | |
| (14) மின்தொழில் நுட்பவியல் | |
| (15) தொழிற்சாலைச் செலவினக் கணக்கு முறை | |
| (16) சுகாதார இயந்திரவியல் | |
| (17) கட்டட அளவைகள் | |

3. புற போதனாசிரியர்க்கான கட்டணங்கள் அவர்களின் தகைமை அனுபவம் அவர்கள் படிப்பிக்கும் வகுப்புக்கள் ஆகியவற்றிற்கு அமைய, ரூபா 5.00 தொடக்கம் ரூபா 15.00 வரை மாறுபடும்.

4. நியமனம் இவ்வருடம் ஐப்பசி மாதம் தொடக்கம் அடுத்த வருடம் ஆவணி மாதம் வரையுள்ள காலத்துக்கானதாகும். அவசியம் ஏற்படின் குறிப்பிட்ட காலத்திற்கு முன் நியமனம் நிறுத்தப்படலாம்.

5. வகுப்புகள் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணி வரையும், பி. ப. 4.45 மணி தொடக்கம் பி. ப. 7.00 மணி வரையும் நடைபெறும். விதிக்கப்பட்ட இந்நேரங்களில் படிப்பிக்க ஆயத்தமாய் இருப்பவர்களின் விண்ணப்பங்களே மாத்திரமே சீர்தூக்கப்படும். விண் ணப்பதாரிகள் அவர்களுக்குப் படிப்பிக்க வசதியாகவுள்ள நேரத்தை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

6. உள்ளகப் பரீட்சகர்கள் அல்லாதவர்கள் அமர்த்தப்படாத வருடாந்த இடைமானிப் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சைகளிலும் மேலதிக வேதனமின்றி அவர்களுடைய வகுப்புகளிலுள்ள மாணவர்களை புற போதனாசிரியர்கள் பரீட்சிக்க வேண்டும்.

7. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பகுதித் தலைவர் மூலம் அனுப்பப்படவேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்கு முன் காலி தொழில் நுட்பக்கல்வி நிலைய அதிபரால் பெற்றுக்கொள்ளப்படாத விண்ணப்பங்கள், விண்ணப்பம் உரிய திகதிக்கு முன் பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் தாமதத் திற்குத் தகுந்த காரணம் காட்டப்பட்டாலுமன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. எப்பாடம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகிறதென விண்ணப் பப்படிவத்தில் குறிப்பிடுதல் மிகவும் முக்கியமெனக் கவனிக்கவும்.

பிரதேச வித்தியாதிபதி,
காலி.

கல்விக் கந்தோர்,
காலி,
1969 ம் ௵ ஆவணி ௴ 15 ந் உ.

8–1236—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869.

## ஆயுள்வேத திணைக்களம்

### மருத்துவ உத்தியோகத்தர் பதவி (சாதாரணதரம்)

### ஆயுள்வேத ஆரோக்கியசாலை (ரச செய்துகாட்டல்)

இல. 14,866, 8.8.69 ல் வெளியான வர்த்தமானியில் மேற்கூறப்பட்ட பதவிக்கான விளம்பரத்தின் கீழ் 3 ம் பந்தியில் (ii) ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதை பின்வருமாறு கொள்ளவும்.

3(ii) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் சொந்த மருத்துவச் செய்கையில் ஈடுபட உரித்துடையவராக மாட்டார்.

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 81,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 16 ந் உ.

8–1285/1—29.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,869

## ஆயுள்வேத திணைக்களம்

### மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் (சாதாரணதரம்)

### ஆயுள்வேத ஆரோக்கியசாலைகள்

இல. 14,866, 8.8.69 ல் வெளியான வர்த்தமானியில் மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விளம்பரத்தின் கீழ் 3 ம் பந்தியில் (ii) ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதை பின்வருமாறு கொள்ளவும்.

3(ii) தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் சொந்த மருத்துவச் செய்கையில் ஈடுபட உரித்துடையவராக மாட்டார்கள்.

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 16 ம் உ.

8–1285/2—29.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,869

## பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

### தொழில் நுட்ப உதவியாளர் பதவி

பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள தொழில் நுட்ப உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ் கொடுக்கப்பட்ட படிவத்தில், அதிபர், பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம், 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என முகவரியிட்டு 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ம் திகதியிலன்றேல் அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்.**—இப் பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குட்பட்டதுமாகும். ஆனால் முதல் மூன்று வருட காலமும் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்கள ஆணையாளரால் மேற்கொள்ளப்படும் பயிற்சியைப் பெறுமாறு வேண்டப்படுவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப் பதவிக்குரிய சம்பளத்திட்டம் வருடம் ரூபா 3,180 ல் ஆரம்பமாகி, வருடம் ரூபா 120 ஐக் கொண்ட 6 வருட உயர்வுகளாலும், ரூபா 180 யைக் கொண்ட 8 வருட உயர்வுகளாலும், ரூபா 240 யைக் கொண்ட 6 வருட உயர்வுகளாலும் ரூபா 6,780 வரை உயர்வதுடன் ரூபா 4,080, ரூபா 4,800, ரூபா 5,580 க்கு முன் விலைத் திறமை காண் தடைகள் உண்டு.

தெரியப்பட்ட அபேட்சகரின் தகுதியையும், அனுபவத்தையும் கவனித்து திறைசேரியின் ஆலோசனையுடன அவருக்கேற்ற சம்பளத்திட்டத்தில் நியமிக்கப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியினாலோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(இ) 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ம் திகதியில் 20 வயதிற் குட்படாமலும் 30 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயது கட்டுப்பாடு வேற்றுமையின்றி கவனிக்கபடும்).

(ஈ) அங்கீகாரம் பெற்ற ஒரு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரி (பொது)ப் பரீட்சையில் தூய அல்லது பிரயோக கணிதத்திலோ அல்லது கணிதத்துடன் பௌதிகவியல் அல்லது இரசாயனவியல் பாடங்களுடன் சித்தியடைந்திருந்தல் வேண்டும். புவி வரலாற்றியலை ஒரு பாடமாக எடுத்துச் சித்தி அடைந்திருந்தால் அல்லது பரிசோதனைச் சாலை அனுபவமும் புவியியலில் அல்லது அதை யொத்த விஞ்ஞானத் துறையில் தொழில் நுட்ப அனுபவமும் இருப்பவர்களுக்கு சலுகை அளிக்கப்படும்.

(உ) பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் கடமையாற்றும் வெளிக்கள உதவியாளரும் பரிசோதனைச்சாலை உதவியாளரும் 15 வருடச் சேவைக்குக் குறையாமல் கடமையாற்றியிருந்தால் அவர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் (**மு.கு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சன்றிதழ் ஏற்கப்படமாட்டாது);

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சானறிதழ்;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்;

(ஈ) உயர் தொழிலுக்குரிய சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும் அவற்றின் நகல்களையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. திணைக்கள ஆணையாளர்களுக்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த திகதிக்குப பின் இங்கு கிடைத்தால் அவ்விண்ணப்பங்கள் அத் திணைக்கள ஆணையாளரிடம் குறித்த திகதிக்கு முன் கிடைத்தது என்றும், அதை ஏற்குமாறு, தாமதத்திற்குத் தகுந்த நியாயம் காட்டத் தவறினால் அவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. அபேட்சகர்கள், இத் திணைக்களத்தில் குறித்த நேரம், திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுவர். இதற்காகிய பயணச் செலவு எதுவும் கொடுபட மாட்டாது.

8. விண்ணப்பங்களை, திணைக்கள ஆணையளர், பூ கற்ப ஆராய்சசித் திணைக்களம், என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத்திணைகளத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும், நேராக அனுப்பக் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பெருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

எல். ஜெ. டீ. பர்னான்டோ,
ஆணையாளர்,
பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம்.

பூ கற்ப ஆராய்சசித் திணைக்களம்,
48, ஸ்ரீ ஜினரத்தின பாதை,
கொழும்பு 2.

### மாதிரிப் படிவம்

### பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

### தொழில் நுட்ப உதவியாளர் பதவி

1. முழுப் பெயர் : ————.
(உறுப் பெழுத்தில்)
(அ) பெயர் : ————.
(ஆ) மறு பெயர் : ————.

2. தபால் விசாலம் : ————.
(விலாச மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படல் வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி : ————.
(ஆ) 1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 26 ம் திகதியில் வயது : ————

4. தேசிய இனம் : ————.
(வம்சாவழி அல்லது பதிவுப் பிரஜையா எனக் குறிப்பிடுக. பதிவுப் பிரஜையாயின் பதிவுப் பத்திர தொடர்பு இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).

5. பிறந்த இடம் : —

(அ) விண்ணப்பக்காரர் : ————.

(ஆ) தகப்பன் : ————.

(இ) தகப்பன் வழிப் பேரன் : ————.

(ஈ) தகப்பன் வழிப் பூட்டன் : ————.

(விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்திருந்தால் (ஆ) அல்லது (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக. அவர் இலங்கையில் பிறக்காவிடின் (ஆ) யும் (இ) யும் அல்லது (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக.)

6. விண்ணபகாரர் விவாகமானவரா ? தனிப்பட்டவரா ? தாரமிழந்தவரா ? ————.

7. கீழ்க்காணும் தகைமைகளைப் பெறுவதற்குப் படித்த பாடசாலைகளிலும், கலலூரிகளிலும் சேர்ந்த திகதியும் விலகிய திகதியும் : ————.

(அ) பொதுத் தராதரம் : ————.

(ஆ) உயர் தொழிற் கல்வி : ————.

8. விளையாட்டுத் துறையில் நீர் பெற்ற சிறப்புக்கள் (எதும் இருப்பின்) : ————.

9. (அ) நீர் கடன் தொல்லை இல்லாதவரா ? இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புக்களின் அளவுகள் : ————.

(ஆ) சட்ட நீதி மன்றங்களில் ஏதாவது குற்றப் பாதகத்திற்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானல் வழக்கு இலக்கத்தை எடுத்துக் காட்டி, திகதிகளோடு முழுவிபரங்களையும் குறிக்குக :————.

10. பாடசாலைக் கல்வி, உயர் தொழிற் கல்வி ; நுண் தொழிற் கலவித் தகைமைகள் : ————
(பல்கலைக் கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள் உயர்தொழிற் கல்வி/அல்லது நுண்தொழிற் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களை சித்தியெய்திய திகதியுடன், வகுப்புத் தரம் ஏதாவது பெற்றிருந்தால், எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் ஆகியவனவும் தயவு செய்து தருக)

11. இப்போதைய தொழிலும், முன்பேதேனும் பதவிகளிலிருந்தால் அவ்விபரங்களையும் தருக : ————.

12. விசேட உரிமைகள், தகைமைகள், பயிற்சிகள் அனுபவங்கள் எதும் இருந்தால் அவைகளின் விபரங்களைத் தருக : ————.

13. மூன்று நற்சான்றுப் பத்திரங்கள் அளிக்கக்கூடிய தகைமையாளரின் பெயர்களையும் விலாசங்களையும், பதவிப் பெயர்களையும் தருக : ————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால், தகுதியற்றவனுகக் காணப்படுவேனென்றும், நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையன்று கண்டு பிடிக்கப்படடால். நட்ட ஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேனென்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

8–1377—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### படம் வரைஞரின் பதவிகள், வகுப்பு 2

கொழும்பு கப்பற்றுறை ஆணையாளரின் திணைக்களத்தில் 2 ஆம் வகுப்பு படம் வரைஞரின பதவிகளுக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழேதரப்பட்டிருககும் மாதிரிப் படிவம் போனற படிவத்தில விண்ணப்பங்கள் செய்யபபடடு 20.9.1969 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அவை எனககுக் கிடைக்கும்படியாக அனுபபப்படுதல் வேணடும.

2. **நியமன விதிகள் :**

(1) நிரநதர, இளைப்பாறு சம்பளமுள்ள 2 ஆம் வகுப்பு படம் வரைஞரின் பதவிகளில் நியமனம் பெறுபவர்கள், விதவைகள், அனுதைகள் உபகாரச் சம்பளத் திடடத்துக்கு பணம் செலுத்துதல் வேணடும். தற்காலிக பதவிகளில நியமனம் பெறுபவர்கள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குப் பணம் செலுத்துதல் வேண்டும் ;

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் குறுகிய கால அறிவித்தலில் பதவியேற்கவேண்டி இருக்கும்.

3. **சம்பள அளவுத் திட்டம்.**—வருடமொன்றுக்கு ரூபா 1,260—21 × 120—3,780.

4. **கல்வித் தகைமைகளும், பிற தகைமைகளும்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும், பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருபதிகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(1) 45 வயதுக்குக் குறைவாகவிருப்பது விரும்பத்தக்கது ;

(2) நற்பண்பு உடையவராகவும், உடலாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(3) (அ) தொழிற பயிற்சிக் காலத்தை (விடயத்துக்கேற்ப 1 வருடம் அல்லது 2 வருடங்கள்) வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும். அத்துடன், திணைக்களத்தில் படம் வரையும் பயிலுனராகச் சேர்ந்த பினனர் 2 வருடப் பயிற்சியைப் பெற்று இறுதிப் பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது,

(ஆ) **கணிதத்தை ஒரு பாடமாகக் கொண்டு சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது, கணிதம், சிங்களமொழி/தமிழமொழி உட்பட ஆறு பாடங்களில், கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப்பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடையவராக இருத்தல் வேண்டும் ;**

(1) விண்ணபதாரர்கள் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில பல்வேறு தரங்களிலும் 3 வருட மாலைநேரப் பயிற்சி நெறியைக் கற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் தொழில் நிலையத்தில் அல்லது தத்துவம் பெற்ற எஞ்சினியர் அல்லது கட்டடக் கலைஞர் தாபனத்தில் 4 வருடத் தொழிற் பயிறசியைப் பயின்றிருத்தல வேணடும். (மேலே சொல்லப்பட்ட தகைமையைக் கொணட ஒரு விண்ணபதாரர், மேலே கறிப்பிடப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில், வருடமொன்றுக்கு ரூபா 1,620 க்கு மேற்படாத ஒரு சம்பளத்தில் நியமனம் செய்யப்படுவது பற்றி ஆலோசிக்கப்படும்)

(2) விண்ணபதாரர்கள இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கட்டட நிர்யாணைப் பயிற்சி நெறி 2 ஆம் பிரிவுப் பரீட்சையில், 1947 ஆம் ஆண்டுக்க முன்னர் சித்தி பெற்றிருத்தல் வேணடும். அத்துடன, ஒரு அரசாஙகத் திணைக்களத்தில் அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகத்தாபனத்தில படம் வரைஞராக 2 வருடங்களுக்க மேலாகச சேவை செய்திருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பதாரர்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் தொழில் நிலையத்தில், அல்லது தத்துவம்பெற்ற எஞ்சினியர் அல்லது கட்டடக் கலைஞர் தாபனத்தில் படம் வரைஞராக 5 வருடகாலம் சேவை செயதிருத்தல் வேணடும்.

5. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) மிகக் கூடுதலாகப் பெற்ற கல்வித் தகைமைக்கான சான்றிதழ் ;

(இ) பண்பு பற்றிய இரு சானறிதழ்கள் ;

(ஈ) உயர்தொழில்/தொழில் நுட்பம் சம்பந்தமாகப் பெற்ற தகைமைச் சானறிதழ்கள்.

6. *அரசாங்க சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் முடிவுத் திகதியனறு அலலது அதற்கு முனனர் எனககுக் கிடைக்கும்படி திணைக்களத் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேணடும்.*

7. விண்ணப்பங்கள், அல்லது அவை சம்பந்தமான வேறேதும் கடிதத் தொடர்புகள் "கப்பற்றுறை ஆணையாளர், கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, த. பெ. இல. 528, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல வேண்டும். அவைகளை இந்திணைக்களத்தில இருக்கும் உத்தியோகத்தர் எவருக்கும், அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் ஆகாது.

8. இந்த வர்த்தமானியின் 1 ஆம் பகுதி, 2 ஆம் தொகுதி ஆரம்பத்தில் பிரசுரமாகி இருக்கும், அரசாங்க சேவைப்பதவிகளுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 1 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**2 ஆம் வகுப்பு படம் வரைஞர் பதவிக்கான விண்ணப்பம்**
**கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு**

1. முழுப் பெயர் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. தேசிய இனம் :————.
4. பிறந்த திகதி :————.
5. கல்வித் தகைமைகள் :————.
6. உயர் தொழிலுக்கான தகைமைகள் :————.
7. பாடசாலையை விட்டு விலகியதில் இருந்து செய்த வேலைகளின் அட்டவணை :————.
   (கால முறைப்படி)
   வேலைசெய்த இடத்தின் பெயர் :————.
   சேவைக்காலம் :————, இருந்து :————, வரை :————.
   செய்த தொழில் :————.
8. விளம்பரத்தின் 4 (3) ஆம் பந்தியில் எந்த உப-பந்தியின் கீழ் தகுதி உடையர் என்பதைக் குறிப்பிடுக :————.
9. நற்சான்றிதழ்களை வழங்கியவர்களின் பெயர்களும் பதவிகளும் :————.

இந்த விண்ணபத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இந்த விண்ணபத்தில் இருக்கும் விபரங்கள் எதும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கண்டுபிடிக்கப்படுமிடத்து, தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அப்பிழை கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் அப்பிழை கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவும் இன்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அரசாங்க சேவையில் உள்ள ஒரு பதவியில் இருந்து நான் விலக்கப்படவில்லை யெனறும், நிறுத்தப்படவில்லையென்றும், நானாக விலகவில்லை என்றும் அல்லது ஒரு நீதிமன்றத்தில் நான் குற்றவாளியெனக் காணப்படவில்லை யென்றும் மேலும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி :————. ........................................ விணணப்பதாரரின் கையொப்பம்.

8-1291—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

இல. : 1/23/2/19(ஜி)

### பொது எழுதுவினைஞர் சேவையில் நிர்வாக எழுது வினைஞர் சேவையின் இரண்டாந் தரத்திற்குப் பதவி யேற்றம் செய்வதற்குப் பரீட்சை — நவெம்பர் 1969

**பரீட்சைத் திகதி.**—பொது எழுதுவினைஞர் சேவையில் நிர்வாக எழுது வினைஞர் சேவையின் இரண்டாந் தரத்திற்குப் பதவியேற்றம் செய்வதற்குப் பொதுப் பரீட்சை ஒன்று சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் கச்சேரி நிலையங்கள் யாவற்றிலும் பரீட்சை ஆணையாளரினால் 1969 நவம்பர் 22 ஆந் திகதி நடாத்தப்படும்.

எந்தக் கச்சேரி நிலையத்திலும் போதியளவு பரீட்சார்த்திகள் தோன்றாவிடின் அந்நிலையம் நிராகரிக்கப்படும்.

2. **முடிவுகள் பிரசுரிக்கப்படலும் வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கையும்.**—சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். இப்பரீட்சையால் நிரப்பவேண்டியுள்ள வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கை பின்பு அறிவிக்கப்படும். தேவைப்படும் ஆகக் குறைந்த தரத்தைப் போதியளவு பரீட்சார்த்திகள் எய்தாவிடின் சில வெற்றுப் பதவிகள் நிரப்பப்படாது விடப்படும்.

3. **சம்பளங்களும் சேவை நிபந்தனைகளும்.**—1955 ஒற்றோபர் முதலாம் திகதி 10,844 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பொது எழுதுவினைஞர் சேவையின் அறிக்கைக் குறிப்பைப் பார்க்க.

4. **தகவுத்திறன்.**—1969 ஒற்றோபர் மாதம் முதலாந் தேதியன்றோ அதற்கு முன்னரோ பொது எழுதுவினைஞர் வகுப்பில் நான்கு ஆண்டுச் சேவை திருத்திகரமாகச் செய்து முடித்தவரும் தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவருமான பொது எழுதுவினைஞர் சேவையில், பொது எழுதுவினைஞர் வகுப்பிலுள்ள எழுதுவினைஞர்க்கு மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படும். எனினும், அரசாங்கமாவட்ட எழுதுவினைஞர் சேவையில் அல்லது மருவிய எழுதுவினைஞர் சேவையில் எழுதுவினைஞராக அல்லது தற்காலிக எழுதுவினைஞராகவிருந்திருந்தால், 1969 ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ 8 ஆண்டுத் திருத்திகரமான சேவையை தற்காலிக எழுவினைஞராக அல்லது அரசாங்க மாவட்ட எழுதுவினைஞர் சேவையிலுள்ள எழுதுவினைஞராகச் செய்து முடித்திருக்கக்கூடியவராகிய பொது எழுதுவினைஞர் வகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளவரும் நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவருமாகியோர் பிற தகவுத்திறன் நிபந்தனைகளைத் திருத்திப்படுத்துவாராயின் இப்பரீட்சையெடுப்பதற்கு உரிமையுடையவராவர்.

5. **விண்ணப்பங்கள்.**—(i) இப்பரீட்சைக்கு அனுமதிப்பதற்குரிய விண்ணப்பத்தின் மாதிரிப் பத்திரம் சிங்கள மொழியில் காணப்படும் விளம்பரத்தின் கீழ் உள்ளது. விண்ணப்பக்காரர்கள் தமது விண்ணப்பங்களை முழுத் தாளின் அரைத்தாளில் (வேறு எந்த அளவுப் பத்திரத்திலுமின்றி) தயாரித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்கு ஒரு தாளையே உபயோகித்தல் வேண்டும். குறித்த பத்திரத்தின் முதலாம் பக்கத்தில் 1–7 வரையுள்ள கூடுகள் முதற்பக்கத்திலும் திணைக்களத் தலைவரின் சான்றிதழும் அவரின் அத்தாட்சி பத்திரமும் இரண்டாம் பக்கத்திலுமிருத்தல் வேண்டும். இப்பத்திரங்களைத் தட்டெழுத்திலும் தயாரிக்கலாம் ; ஆனால், அது பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகவும் சரியாகவும் நிரப்பப்படல் வேண்டும்.

அரசாங்க மொழிக்கொள்கையின் பொருட்டு புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை அரசகரும மொழியில் தயாரித்து அம் மொழியில் நிரப்புதல் வேண்டும். எனினும், முன்னர் சேர்ந்த உத்தியோகத்தர்கள், விண்ணப்பப் படிவங்களை ஆங்கிலத்திலோ, அரசகரும மொழியிலோ தயாரித்து அம் மொழியில் நிரப்பும் விருப்புரிமையுடையவராவர்.

(ii) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்படல் வேண்டும் ; அத்துடன் அவர்களின் திருத்திகரமான சேவை பற்றிய சான்றிதழ்களும் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப பத்திரமும் 'எல்லா வகையிலும் பூரணமாகவும் திருத்திகரமாகவும் இருக்கின்றதோ எனவும் அவ்விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்துள்ள சான்றிதழ்களில் தாம் கையெழுத்திட்டு இருக்கின்றாரோவெனவும் திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை அவர்கள் பதிவுத் தபால் மூலம் பரீட்சை ஆணையாளர், கொழும்பு 2, என்னும் விலாசத்திற்கு, 1969 ஒக்ரோபர் 15 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை ஆணையாளர் அனுமதி அட்டைகள் வழங்குவர். இப்பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு அனுமதி அட்டைகளைக் காட்டுதல் வேண்டும். இவ்வனுமதி அட்டைகளின்றிப் பரீட்டைக்கு அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) தனித்தனியாகப் பரீட்சார்த்திகளுக்கு நேரசூசி வழங்கப்படமாட்டாது. இவ்வறிவித்தலின் ஒன்பதாம் பந்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் நேரசூசியைப் பரீட்சார்த்திகள் கவனித்தல் தேண்டும்.

(iii) பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை நடாத்துவதைப் பற்றி விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுண்டவராவர். இவ்விதிகளையும் பிரமாணங்களையும் மீறுபவர்கள் அன்னாரினால் விதிக்கப்பட்டும் எந்தத் தண்டனைக்கும் ஆளாவர்.

(iv) இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளின் விதிகளும், பிரமாணங்களும் வேறாக அச்சிடப்பட்டுள்ளன.

7. **அரசாங்க உத்தியோகத்தர் பரீட்சை எடுப்பதற்கு விடுதலை.**—பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்களுக்கு, திணைக்களத் தலைவர்கள் அவ்வுத்தியோகத்தர்களுக்குப் பரீட்சை எடுப்பதற்காகக் கடமை விடுதலை கொடுத்தல் வேண்டும், போக்குவரத்துச் செலவு கொடுக்கப்படமாட்டாது.

8. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைக்குரிய பாடங்களும் அவற்றுக்குள்ள புள்ளிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்துத் தாள்கள் யாவற்றிலும் கூடாத கையெழுத்திற்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற கையெழுத்துள்ள பரீட்சார்த்திகள் தகைமை நீக்கம் பெறுவதற்கும் ஆளாவர்.

| | புள்ளிகள் |
|---|---|
| (1) கணக்குகள் (1½ மணித்தியாலம்) இப்பத்திரத்தில் கணக்குகள் (Accounts) கூட்டல் எண் (Tots) முதலியவற்றில் கேள்விகள் தரப்படும் ; எண்களைக் கையாள்வதில் செம்மையும் கணக்கின் எளிய அடிப்படை விதிகள் பற்றிய அறிவும் சோதிக்கப்படுமாறு அமையும் .. .. .. | 100 |
| (2) பிரமாணங்கள், நடவடிக்கைகள், அலுவலக முறைகள் (இரண்டு மணித்தியாலம்) ஓர் உத்தியோகத்தர் எழுதுவினைஞரின் தகுதியையும் உபயோகத்தையுமுடையாரோ எனச் சோதிக்கும் முறையில் இப்பத்திரம் அமையும். உத்தியோக பூர்வமான கடிதத் தொடர்புகளைச் சுருங்கக் கூறுமாறும், ஒரு கட்டளைப்படு மாதிரிக் கடிதமொன்றை எழுதுவதற்கும் சுட்டெண்முறை, கோவைப்படுத்தல் முதலியன பற்றிய அறிவைக் காட்டவும், எழுத்தில் எடுத்துரைக்கும் ஆற்றலைத் தெரிவிக்குமாறும் வேண்டப்படலாம் .. .. | 200 |

**குறிப்பு.**—(i) எழுதுவினைஞர் சேவையில் சேர்வதற்குரிய போட்டிப் பரீட்சையை எந்த மொழியில் ஏடுத்தனரோ அம்மொழியிலேயே இரு பத்திரங்களுக்கும் விடை தருதல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி முதலில் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் அச்சேவையில் சேர்வதற்குத் தகுதிபெற்ற அந்த மொழியிலேயே பரீட்சையெழுதல் வேண்டும். தாம் விரும்பினால் அவர்கள் அரசகரும மொழியில் (சிங்களம்) இரு பத்திரங்களுக்கும் விடை தரலாம். ஆங்கில மொழி மூலம் சேர்க்கப்பட்டு அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்குப் பழைய உத்தியோகத்தர்கள் எனக் கருதப்படுவோர் இவ்விரு பத்திரங்களையும் முற்றாக சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ செய்யலாம்.

(ii) இப்பரீட்சை போட்டிப் பரீட்சையாயினும் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பத்திரத்திலும் அப்பத்திரத்திற்குரிய புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு 35 வீதப் புள்ளிகளையும் இருபத்திரங்களிலும் அப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளில் நூற்றுக்கு 40 வீதப் புள்ளிகளையும் பெறல் வேண்டும்.

| (3) சிங்களம் அல்லது தமிழ்— | புள்ளிகள் |
|---|---|
| (அ) 1½ மணித்தியாலத்துக்கு எழுத்துப் பரீட்சை .. | 100 |
| (ஆ) வாய்மொழிப் பரீட்சை .. .. | 100 |

எழுத்துப் பரீட்சை பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :—

(i) எளிய உரைநடைப் பகுதிகளை விளங்கல்.

(ii) கீழ்வரும் கட்டுரை முறைகளில் ஒன்றோ அதற்கு மேலாகவோ : விவரணம், உரையாடல், கடிதம் எழுதல்.

(iii) (அ) சிங்களத்தில்/தமிழில் வசனங்கள் மொழிபெயர்த்தல்.
(ஆ) எளிய உரைநடைப் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.

(iv) சொற்கள், சொற்றொடர்கள், வசனங்கள் முதலியவற்றின் கருத்து, தொழில், தொடர்பு ஆகியனவும் பிழைகள் முதலியனவும்.

**குறிப்பு**—(i) இப்பாடத்திலுள்ள பரீட்சையானது குறித்த மொழியில் பரீட்சார்த்தியொருவருககு அன்றாடத் தேவைக்குரிய அறிவுண்டோ என அறியும் தரத்தாய் அமையும்.

(ii) (1), (2) ஆம் பாடங்களில் ஒருமித்து, குறிப்பிட்ட ஆகக் குறைந்த மொத்தப் புள்ளிக்கு மேலே புள்ளிகள் பெறும் பரீட்சார்த்திகள் வாய்மொழிமூலம் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதி பெறுவதற்குச் சிங்களம் அல்லது தமிழ் எழுத்துப் பரீட்சைக்கும் வாய்மொழிப் பரீட்சைக்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளியில் ஆகக் குறைந்தது 35 புள்ளி விதம் பெறல் வேண்டும். எனினும் திறமை வரிசையை நிர்ணயிப்பதற்கு இப்பாடத்தில் எடுக்கும் புள்ளிகள் கவனிக்கப்படமாட்டா.

(iii) (1) கணக்கு, (2) பிரமாணம், நடவடிக்கை, அலுவல் முறைகள் ஆகிய இரு வினாப் பத்திரங்களுக்கும் சிங்களத்தில், அல்லது தமிழ் மொழியில், விடையளிக்கும் பரீட்சார்த்திகள் சிங்களம் அல்லது தமிழ் என்னும் 3 ஆவது பாடத்தினின்றும் விலக்குப் பெறுவர்.

(iv) கீழே கூறப்படும் தகைமைகளில் ஒன்றையேனுமுடைய பரீட்சார்த்திகளும் சிங்களம் அல்லது தமிழ் பாடத்தினின்று விலக்குப் பெறுவர்.

**சிங்களத்திலிருந்து விலக்கு**

(அ) பொதுத் திறைசேரியின் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் உயர் தரத்தில் சித்திசெய்திருத்தல்,

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (சிங்களம்),

(இ) சிங்களமொழி, தற்காலச் சிங்களம், பழைய சிங்களம் ஒரு பாடமாக சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (ஆங்கிலம்) சித்தியெய்தியிருத்தல்,

(ஈ) சிங்கள மொழியில் (அ) பாடத்திட்டத்தில் அல்லது (ஆ) பாடத்திட்டத்தில் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண தரம்) சித்தியெய்தியிருத்தல்,

(உ) 23.3.64 ஆம் திகதிய 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையின் IV ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல்.

**தமிழிலிருந்து விலக்கு**

(அ) பொதுத் திறைசேரியின் தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சையில் உயர் தரத்தில் சித்தியெய்தியிருத்தல்,

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (தமிழ்),

(இ) தமிழ்ப் பாஷை, ஒரு பாடமாக சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (ஆங்கிலம்) சித்தியெய்தியிருத்தல்,

(ஈ) தமிழ்மொழியில் " அ " பாடத்திட்டத்தில் அல்லது " ஆ " பாடத்திட்டத்தில் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தில் (சாதாரண தரம்) சித்தியெய்தியிருத்தல்.

9. **பரீட்சையின் நேரசூசி பின்வருமாறு :—**

| | | |
|---|---|---|
| மு.ப. 9.00 மு.ப. 11.00 | .. | பிரமாணம், நடவடிக்கை, அலுவலக முறைகள், |
| பி.ப. 1.00–பி.ப. 2.30 | .. | கணக்கு, |
| பி.ப. 2.45–பி.ப. 4.15 | .. | சிங்களம்/தமிழ். |

வாய்மொழிப் பரீட்சைக்குத் தகுதிபெறும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அப்பரீட்சைக்குரிய தேதி, நேரம், இடம் ஆகியவற்றைப் பரீட்சை ஆணையாளர் புறம்பாக அறிவிப்பார்.

பி. டி. உடுவெல,
திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 21 ந உ.

## பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி. கீழ்க்காணும் தண்டனைகளின் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால்—அத்தீர்மானம் முடிவானதாகக்கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செயயக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எந்தச் சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலிய வற்றை கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந் நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும் மீண்டு வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்களைக் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு :**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும். சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டு விடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளி லும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப் பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலை களையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்க மாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர் களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத் தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லை யென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கெ. ரி. டபிள்யூ. சுமனசூறிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

8–1349—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா—பொலன்னறுவை உப பிரிவு

பொலன்னறுவை உப பிரிவின் கீழ் பொருட்கள் 1969–70 ஆண்டுகட்கு ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு (ஏற்றுவது, இறக்குவதுடன்) கேள்விப்பத்திரங்கள் பொலன்னறுவையில் உள்ள வடகீழ் பெரும்பாக பொறியியலாளரால் 1969 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 23 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். 10,000 ரூபாவும் அதற்கு மேலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப் பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும்; கிராமஅபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத்தகுதி யுடையவராவர்.

கேள்விப் பத்திரம் அனுப்புவதற்கு குறைந்தபட்சம் இரண்டு லொறி களுக்கு சொந்தக்காரராக இருக்கவேண்டும். கேள்விப் பத்திரத்திற்கு மனுச் செய்யும் பொழுது அதை உறுதிப்படுத்துவதற்கு ஆகவேண்டிய பதிவுப் புத்தகங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இக்கேள்விக்காகிய கேள்விப் பத்திரங்கள் பொல்லன்னறுவை/மின்னேரிய/கிங்குறக்கொடையிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 1969 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 20 ம் திகதி வரைக்கும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி யாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப் படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். வெற் றுப் பத்திரங்கள் வழங்குமுன் கொழும்பு தவிர்ந்த ஏனைய ஏதாவது ஒரு கச்சேரியில் ரூபா 25 கேள்விக் கட்டணமாக செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

இக் கேள்விபற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் பொலநறுவையில் உள்ள பொலநறுவை உபபிரிவு நீர்ப்பாசனப் பொறி யியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக கொள்ள லாம்.

ஆர். துரைராசா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
பொலநறுவை.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
பொலநறுவை,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 17 ந உ.

8–1327—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கந்தளாய் உபபிரிவு

கந்தளாய் உபபிரிவின் கீழ் பொருட்கள் 1969–70 ஆண்டுகட்கு ஓரி டத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுசெல்வதற்கு (ஏற்றுவது, இறக்குவது) கேள்விப் பத்திரங்கள் திருகோணமலை பெரும்பாக நீர்ப் பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும்; அதன் பின்னர் உடன் திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 15,000 க்குக் கூடிய தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கத்தகுதியுடையவராவர். லொறிகள் சொந்தமாக வைத்திருக் கும் கொந்தராத்துக்காரர்கள் மட்டுமே கேள்விபத்திரங்கள் அனுப்பு வதற்குத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள், கந்தளாய், திருகோணமலை, அல்லை ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசனக் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ம் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன், தாம் இப்போது திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள சேவைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப் பத்திரங்களுக்கு விண் ணப்பிக்கவேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக் கட்டணமாக ரூபா 25 ஐ கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் செலுத்த வேண்டும். இத்தொகையை ஓர் கச்சேரியில செலுத்தி பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது. கேள் விப்பத்திரங்களுக்கு மனுச்செய்யும் பொழுது லொறிகளின் பதிவு இலக்கத்தையும், லொறியின் நிறையையும் கொண்ட விபரங்களையும் காட்டவேண்டும்.

மேலதிக விபரங்களை கந்தளாய் உப பிரிவு நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செ. பூபாலசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கந்தளாய் உபபிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
கந்தளாய்,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 16 ந உ.

8–1326—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்கு தகுதியான ஆட்களும் சேவையும்.**—1969 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி 1970 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், அநுராதபுரம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியில் எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேலே குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்களின் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், அநுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர் தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாக கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரரகள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களை குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலைக்கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

பொ. இரத்தினசபாபதி,
பதில் சௌக்கிய சேவை அத்தியட்சர்.

அநுராதபுரம்,
6.8.69.

### குறித்த அட்டவணை

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள் — மீன் | மாட்டு இறைச்சி | கரு வாடு | காய் கறி | நோயாளிகள் — மீன் | மாட்டு இறைச்சி | கரு வாடு | காய் கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கொமரன்கடவலை வைத்திய சாலை .. | 100 .. | 600 | 19.9.69 காலை 10 மணி | 200 .. | — .. | 450 .. | 950 .. | 350 .. | — .. | 750 .. | 1,300 |
| 2. குச்சவெளி வைத்தியசாலை .. | 100 .. | 600 | | 300 .. | — .. | 600 .. | 1,400 .. | 300 .. | — .. | 500 .. | 1,000 |
| 3. யக்கலை வைத்தியசாலை .. | 100 .. | 600 | | 200 .. | 200 .. | 200 .. | 900 .. | 600 .. | 600 .. | 650 .. | 2,600 |
| 4. பெரிய கிண்ணியா வைத்திய சாலை .. | 100 .. | 800 | | 350 .. | — .. | 700 .. | 1,400 .. | 1,150 .. | — .. | 2,300 .. | 4,500 |
| 5. தம்மன்னுவ வைத்தியசாலை | 100 .. | 600 | | 100 .. | — .. | 200 .. | 400 .. | 250 .. | — .. | 500 .. | 1,000 |
| 6. *கலன்பிந்துனு வேவா பி. வி. | 100 .. | 400 | | 100 .. | — .. | 200 .. | 400 .. | 250 .. | — .. | 500 .. | 1,000 |

* 1.10.69 தொடக்கம் 31.12.69 வரை.

8–1249—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

## வன திணைக்களம்

### தேக்கம் நாற்றுக்காகிய இரு நீரிறைக்கும் இயந்திரங்கள் விநியோகிக்கும் கேள்விகள்

மேற் குறிப்பிட்டவற்றை விநியோகிப்பதற்கான கேள்விகள் 12.9.69 காலை 10 மணி வரை வன பரிபாலன அதிபர் த. பெ. இல. 509 கொழும்பு 2 அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. வன பரிபாலன அதிபர், கியூ வீதி கொழும்பு 2 அவர்களிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய குறித்த படிவத்தில் இரு பிரதிகளில் கேள்விகள் அனுப்பப்படவேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் ரூபா 100 வன பரிபாலன அதிபரின் இலங்கை வங்கி யோக் வீதிக் கிளையின் 34 ஆம் இலக்க கணக்கு வைப்பில் போடப்பட்டு கேள்விப்பத்திரம் கொடுப்பதற்கு முன்பாக காரியாலயப் பற்றுச் சீட்டுச் சமர்ப்பிக்கவேண்டும். 11.9.69 மாலை 4 மணிவரையில் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும்.

4. மேற்கொண்ட விபரங்கள் தேவைப்படும் பொருளின் அட்டவணை உட்பட, கொழும்பு 2 கியூ வீதியிலுள்ள, வன பரிபாலன அதிபரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எம். எஸ். றணதுங்க,
பதில் வன பரிபாலன அதிபருக்காக.

8–1292—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினல் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், புத்தளம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாயவிரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ் நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து, அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு நிலைய பொறுப்பு அலுவலாளர், நோயாளிகளுக்கும் ஊழியருக்கும் வேண்டிய அரிசியை (நோயாளியானலும் ஊழியரானலும் அரிசிக்கூப்பன் கொடுத்தவர்களுக்கு) பெறுவதற்கு அனுமதிப்பத்திரம் உணவுப்பகுதியிடமிருந்து பெற்றுக் கொடுப்பார். இவ்விதம் கொடுக்கப்படும் அரிசி இனமாகவோ அல்லது குறைக்கப்பட்ட விலையிலோ 19.12.66 க்குப் பின் உணவுப்பகுதியால் நிர்மாணிக்கப்பட்டதாய் இருக்கும்.

புத்தளம்,
1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 18 ந் உ.

ஆர். எச். பீறிஸ்,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

குறித்த அட்டவணை

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்வி மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள்: மீன் | மாட்டி றைச்சி | கருவாடு | காய்கறி | நோயாளர்கள்: மீன் | மாட்டி றைச்சி | கருவாடு | காய்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | | | | | | | | |
| கல்முறுவை கிராம வைத்திய சாலையும் பிரசவ விடுதியும் | 100 | 600 | 69.9.16 காலை 10 மணி | 150 | 150 | 150 | 600 | 1,200 | 1,200 | 1,200 | 4,800 |
| மாதம்பை கிராம வைத்திய சாலை | 100 | 800 | | 200 | 200 | 200 | 800 | 900 | 900 | 900 | 3,600 |

8-1294—29.8.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

இல. இப/60/சி/1.

## காலிக் கச்சேரி

### கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்தில், கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்காக 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை காலி மாவட்ட அரசாங்க அதிபரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அத்தினத்தில் குறித்த நேரத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விக்காரர்கள் அங்கு சமுகமாயிருக்கலாம். காலி உதவி அரசாங்க அதிபரின் அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. காலி மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில் இரு பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலைகளுக்கான படத்தை மேற்சொல்லப் பட்ட அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் பார்த்துக் கொள்ளக் கூடியதாயுள்ளதுடன் அதுசம்பந்தமான முழுவிபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ் வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு ஒப்பந்த வேலைகளுக்கு அரசாங்கத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்கள், அரசாங்கவேலை, நீர்ப்பாசனம், கல்வி அல்லது வேறு திணைக்களங்களில் அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள இவ்வித வேலைகளைத் திருப்திகரமான முறையில் செய்து முடிப்பதற்குத் தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கக் கூடியதுடன், அதற்காக மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க அதிபருக்கு அவ்வாறு பதிவுபெற்றிருத்தலையும் தகுதிபற்றிய சான்றுப் பத்திரத்துடன் ரூபா 100/—ஐக் கட்டுப்பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விக்குரிய பத்திரங்கள் வழங்கப்படும். பதிவு பெற்ற சங்கங்கள் தங்கள் தகுதியைக் குறித்து சம்பந்தப்பட்ட திணைக்கள மாவட்டத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றுப்பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இக்கேள்விக்கான கட்டுப் பணத்தை காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "..................................க்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடுவதுடன் எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரையிட்டு (சீல்) பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டப்ளிவ். எல். ஆர். பி. த. அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

அட்டவணை

| | வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு பெற்றிருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|---|
| 1. | தாம்மலை—ஹல்விட்டிகல வீதி 2 வது மைலில் (1 ஆம் பகுதி) எஞ்சிய வேலை | ஹினிதும் பத்து | 15,000 |
| 2. | தாம்மலை—ஹல்விட்டிகல வீதி 2 வது மைலில் (2 ஆம் பகுதி) எஞ்சிய வேலை | ஷை | 15,000 |
| 3. | ஹல்விட்டிகல குடியேற்றத்தின் 2 வது திட்ட 1 வது மைல் எஞ்சிய வேலை | ஷை | 15,000 |

காலிக்கச்சேரி,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 13 ந் உ.

8–1245—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

இல. இப/60 டி.

## காலிக் கச்சேரி

### கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்திலே, கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்காக 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு (த.பெ. 500) காணிக்கொமிசனர் திணைக்கள கேள்விப்பத்திரச் சபைத் தலைவரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் அக்காரியாலயத்தில் சமுகமாயிருத்தல் வேண்டும். காலிமுகம், செக்ரடேரியட் கட்டிடம் 3 வது மாடியில் அமைந்துள்ள காணிக் கொமிசனர் காரியாலய 357 ஆம் இலக்க அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பத்திரங்களில் இரு பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலை சம்பந்தமான படத்தைக் மேற்சொல்லப்பட்ட அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் பார்த்துக்கொள்ளக் கூடியதாயுள்ளதுடன் அது சம்பந்தமான முழு விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு, ஒப்பந்த வேலைக்காக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், அரசாங்கவேலை, நீர்ப்பாசனம், கல்வி அல்லது வேறு திணைக்களங்களில் அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள இவ்வித வேலைகளைத் திருப்தியான முறையில் செய்து முடிப்பதற்கு தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும்

இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கக் கூடியதுடன், அதற்காக மேற் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க அதிபருக்கு அவ்வாறு பதிவு பெற்றிருத் தலையும் தகுதிபற்றிய சான்றுப் பத்திரத்துடன் ரூபா 100/- ஐக் கட்டுப் பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விக்கான பத்திரங்கள் வழங்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள், தங்கள் தகுதியைக் குறித்து சம்பந்தப்பட்ட திணைக்களங் களின் மாவட்டத் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றுப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இக்கேள்விக்கான கட்டுப் பணத்தை காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதோர் கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " தாம்மல—உறல்விட்டிகல வீதி 1 மைலுக்குத் தாரிடுதலுக்கான கேள்விப் பத்திரம் " எனக் குறிப்பிடுவதுடன் எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரையிட்டு (சீல்) பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டப்லிவ். எல். ஆர். பி. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, காலி,
1969 ம் ஆு ஆகஸ்ட் மீ 13 ந வ.

**அட்டவணை**

| வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டியதொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1. தாம்மல–உறல்விட்டிகல வீதி 1 வது மைலுக்குத் தாரிடுதல் | உறினிதும் பத்து | 40,000/- |

8–1243—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

**கேள்விப்பத்திர அறிவித்தல்**

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு 1,500 நீள் தொன் வெளுத்த சல்பைட் வுட் பல்ப் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ம் திகதி பி. ப. 2.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதல்வர்களினதும்/வழங்குபவர்களினதும் பெயர்கள், விலாசங்கள் அடங்கிய விண்ணப்பமூலம், கேள்விப்பத்திரப் படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.
1969 ம் ஆு ஓகத்து மீ 10 ந வ.

8–1368—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## அரசாங்க பண்டசாலைத் துறை

**ஏல விற்பனை**

1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ம் திகதி திங்கட்கிழமை முற் பகல் 10 மணிக்கு கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை யிலுள்ள, அரசாங்க பண்டசாலைத் துறையில் நல்லமுறையில் பாவிக்கப் பட்ட 15 மோட்டார் வாகனங்கள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்படி வாகனங்களை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். மேலதிக விபரங்களை அரசாங்க பண்டசாலைத்துறை அத்தியட்சர் அலுவல கத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஏ. பீ. ரூபசிங்க,
அரசாங்க பண்டசாலைத்துறை அத்தியட்சர்.

கொழும்பு,
1969 ம் ஆு ஆகஸ்து மீ 29 ந் வ.

8–1432—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

எல். டபிள்யு/2/27

## புத்தளம் மாவட்டத்தில் "கலயாயவத்தை" யிலுள்ள அரசாங்கக் கட்டிடத்தை ஏலத்தில் விற்றல்

புத்தளம் மாவட்டத்தில், வென்னப்புவ தேர்தல் தொகுதியில் உள்ள " கலயாயவத்தை " யில் இருக்கும் பழைய கட்டிடம், கட்டிட வளவில் வைத்து 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் திகதி காலை 10 மணிகளுக்கு புத்தளம் அரசாங்க அதிபரால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. ஏலவிற்பனையின் போது, ஏதாவது ஒரு கேள்வியை ஏற்றுக் கொள்ளுமுன் அக்கேள்வி கேட்பவரின் நேர்மைபற்றியும் ஏலத்தின் சட்டவிதிகளுக்கேற்ப அவர் நடந்து கொள்ளக்கூடிய தகைமை பற்றியும் அரசாங்க அதிபரோ அவரது பிரதிநிதியோ ஆராய்ந்து திருப்திப்படலாம். அவர் திருப்தி அடையாவிடில், அக்கேள்வியை ஏற்றுக்கொள்ளாது அக்கேள்வி கேட்கப்படாததுபோல் விற்பனையை தொடர்ந்து நடத்த முடியும்.

3. ஏல விற்பனையின்போது, ஒவ்வொரு கேள்விக்காரரும், நேரிலோ அல்லது எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிமூலமோ சமூகம் தரல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏலவிற்பனை ஆரம்பமாகுமுன் தமக்கு அதிகாரமளிக்கும் கடிதங்களை அரசாங்க அதிபரினதோ அல்லது அவரது பிரதிநிதியினதோ பார்வைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. சித்திபெற்ற கேள்விக்காரர் தமது கேள்வி ஏற்றுக்கொள்ளப் பட்டதும், தமது கேள்வியின் அரைவாசித் தொகையை அரசாங்க அதிபரிடமோ அல்லது அவரது பிரதிநிதியிடமோ கொடுக்க வேண்டும். எஞ்சிய அரைவாசித் தொகை ஏலவிற்பனை நடைபெற்ற திகதியிலிருந்து இருவாரங்கட்குள் கட்ட வேண்டும். கேள்வியின் முழுத்தொகையையும் கட்டிய பின்னரே ஏலவிற்பனையின் அனுமதிச்சீட்டு கேள்விக்காரருக்கு வழங்கப்படும். சித்திபெற்ற கேள்விக்காரர் தமது கேள்வியின் அரைப் பங்கை ஏலவிற்பனை முடிந்ததும் கட்டத்தவறினாலோ இன்றேல் எஞ்சிய அரைப்பங்கை ஏலவிற்பனை முடிவுற்ற இருவாரங்கட்குள் கட்டத்தவறி னாலோ ஏலவிற்பனையை ரத்துச் செய்து, கேள்விக்காரரால் கட்டப்பட்டபணம் யாவற்றையும் பறிமுதல் செய்தற்கு அரசாங்க அதிபருக்கு அதிகாரம் உண்டு.

5. இவ்வேல விற்பனையில் அரசாங்க அதிபரின் முடிவே இறு தியானது.

6. ஏல விற்பனையின் அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டு இருவாரங் கட்குள் கட்டடம் முழுதும் அகற்றப்படாவிடில் இக்கட்டடம் மீண்டும் விற்பனைக்கு விடப்படுவதுடன் கேள்விக்காரரால் கட்டப்பட்ட பணம் அனைத் தும் அரசாங்க நிதிக்குச் சேர்க்கப்பட்டுவிடும்.

எம். டபிள்யூ. எல். குணரத்ன,
புத்தளம் அரசாங்க அதிபர்.

புத்தளம் கச்சேரி,
1969 ம் ஆு ஆகஸ்டு மீ 7 ந் வ.

8–1230—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

## பாவித்த பொருட்கள்—ஏல விற்பனை

எதிர்வரும் 12 ம் திகதி புரட்டாதி மாதம் 1969 ம் ஆண்டு முற்பகல் 9.30 மணிக்கு கொழும்பு, எச்சலன் சதுக்கம், பொலீஸ் பயிற்சிப்பாடசாலையில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

துவிச்சக்கர வண்டிகள்
நீல காக்கி மேஸ் கூட்டங்கள்
தொப்பி, பூட்ஸ், சப்பாத்து, தோல்பட்டி
குண்டுப்பை, கன்வஸ் சப்பாத்து
பெற்சீற், மழை அங்கி
வெனியன், துடைப்பங்கள் முதலியன
மெத்தைகள்
காக்கி உடைகள்
நுளம்பு வலை
உடுப்புப் பெட்டி, கதிரை
மின்சார இயந்திரம்

ஏலத்தில் சாமான்கள் வாங்கியவர்கள் உடனடியாகப் பணம் கட்டி விற்பனை முடிந்தவுடன் பொருட்களை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர்.

என். ஜீ. சி. செனிவரட்டின,
பயிற்சி அதிபர்.

பொலிஸ் பயிற்சிப் பாடசாலை,
கொழும்பு 1

8–1305—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869.

---

## ஏல விற்பனை

1969 ம் ஆண்டு ஆனி மாதம் 2 ம் திகதி கடற்கரைக்கு வந்து சேர்ந்த, மாலாதீவுக்குச் சொந்தமான "ஒறிமஸ்" என்னும் தோணி 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ம் திகதி காலை 10.30 மணிக்கு திக்வல்லை நில்வல்லே கடற்கரையோரத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். அதே தோணியில் எடுக்கப்பட்ட கீழ்க்குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் அன்றே கந்தர, பொலீஸ் நிலைய வளவுக்குள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்வரை, தோணியும், பொருட்களும் வேண்ட விரும்புவோருக்கு, இதே இடத்தில் பாக்கக்கூடியதாக வைக்கப்பட்டிருக்கின்றன.

தோணியும் பொருட்களையும், ஏலத்தில் வாங்கியவர், ஏலவிற்பனை முடிந்தவுடன் முழுப் பணத்தைக்கொடுத்து, அவைகளை எற்றுக்கொள்ள வேண்டும்.

1. சாயம் ரின் 1
2. 20 கலன் மண்ணெண்ணெய் கொண்ட போயா 3 ம் ரின் 3 ம்
3. டீசல் எண்ணெய் (கலன் 5½ யுடன்) போயா 1 ம் ரின் 1
4. பிளாஸ்ரிக் போயா 3
5. வாளி 1
6. சின்னவெறும் பீப்பா 1
7. ஒரு பந்துக்கயிற்றோடு சின்ன மரப்பெட்டி
8. வெறும் போத்தலோடு ஒரு சாக்கும்
9. ரின் துண்டுகள் 10 பத்து அடி நீளமுள்ளவை
10. 8 அடி நீளமுள்ள ரின் துண்டுகள் 7
11. பெரிய பேசின் 1
12. மரப்பெட்டி 1
13. பெரிய மரப்பெட்டி 1
14. அங்கர் 2

எச். பீ. வீரரத்ன,
கூட்டு அரசாங்க அதிபர்,
மாத்தறை அரசாங்க அதிபருக்காக.

மாத்தறை அரசாங்க காரியாலயம்,
1969 ஆவணி மீ 19 ம் திகதி.

8–1313—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

## பாவனைக்கு பிரயோஜனப்படாதவை ஏல விற்பனைக்கு உண்டு

1969 வருடம் செப்டம்பர் மாதம் 8 ம் திகதி காலை 10 மணிக்கு ராகமை மஹர சிறைச்சாலையில் பாவனைக்கு முடியாத கீழ்க்காணும் சாமான்கள் ஏலத்தில் இடப்படும். ஏலத்தில் வாங்கும் சாமான்களுக்கு உடனே பணம் கட்டவேண்டும். ஏலம் முடிந்த உடனே வாங்கும் சாமான்களை அப்புறப்படுத்தல் அவசியம்.

R. C. A- எம்ப்ளிபயர் 1
வானொலி பெட்டிக்குரிய (டிவேக்டர் ஸ்டேஜ் 1)
லவுட்ஸ்பீகர் ஒலிபெருக்கி 12
லவுட்ஸ்பீகர் ஒலிபெருக்கி பினிக்ஸ் ஜூனியர் 1

J. P. தெல்கொட,
சிறைச்சாலை அதிகாரி,
மஹர, ருகம.

15.8.69

8–1225—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

---

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1969/70 ம் ஆண்டுக்குரிய துறைவரி விற்பனவு

1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதிவரையுள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள துறைகளில் ஆயவரிகள் பெறுவதற்கும் சகல போக உரிமைகளையும் வழங்குவதற்குமான கேள்விப்பத்திரங்கள் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகளுக்குட்பட இத்தால் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தின் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூபா நூறு (100/–) பிணையாகக் கட்டப்படும் அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும். அவ்வாறான பற்றுச்சீட்டு காட்டுமிடத்து மட்டக்களப்பு கச்சேரியில் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ந் திகதிக்குமுன் வழங்கப்படும் மாதிரிப்பத்திரங்களின் மேலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில்..........(இங்கே துறையின் பெயர் எழுதவும்) துறைவிற்பனவு" என்று இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு, முத்திரை (சீல்) இடப்பட்ட தபால் உறைகளிலேயே ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27 ந் திகதி கீழே குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் கேள்விப்பத்திரங்கள் எற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமூகம் கொடுக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில், கேட்டு விண்ணப்பிக்கும் கொந்தருத்தை திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத் தகைமையுடையவர்கள் என்பதை உறுதிப் படுத்தும் தமது பிரிவுக்குரிய அரசாங்க அதிபரிஞலோ பிரிவுக்காரியாதிகாரியாலோ கொடுக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பகுதிக்குரிய உதவிக்கூட்டுறவு ஆணையாளரிடம் இருந்து தமது சங்கம் துறையை நடத்தி ஆயவரி அறவிடத்தகுதியுள்ளதென்றும் கேள்விப்பணத்தில் மூன்றில் ஒருபங்கை பிணைப்பணமாகக் கட்டக்கூடிய நிதிவசதியுடையது என்றும் ஓர் அத்தாட்சிப்பத்திரத்தைக் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் அவ்விடத்தில் விற்பனை நிபந்தனைகளுக்கிணங்கக் கையொப்பமிட்டு வாங்கிய பெறுமதியில் மூன்றில் ஒருபங்கை பணமாக அரசாங்க அதிபருக்குப் பிணைகட்டவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனவு நிபந்தனைகட்கு இணங்கவோ பிணைகட்டுவதற்கோ, பிணைஉறுதிக்கு தொகையைக் கட்டுவதற்கு தவறுமிடத்து அவரினுல் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவார். அத்துடன் அவர் அரசாங்கத்தின்கீழ் எவ்வித கொந்தருத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவார். இவ்விதிவிலக்கைத் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்தருத்துக்காரரினுல் அல்லது கொந்தருத்துக்காரர்களினுல் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டுப் பிணையும் கொடுக்கப்பட்டபின் மற்றையோரின் கேள்விப்பத்திரப் பணம் மீட்டுக்கொள்ளப்படும்.

எவ்வித காரணமும் காட்டாது எக்கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தனியுரிமை அரசாங்க அதிபருக்கே உரித்தாகும்.

தற்போது பாதைகள் வேலைசெய்யும் துறைகளுக்குப் பாதைகள் கொடுக்கப்படும். வள்ளங்கள் கிடைக்குமாயின் வள்ளங்கள் கொடுக்கப்படும். அவ்வாறு வள்ளங்கள் கிடைக்காவிடில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காகத் தம்முடைய சொந்த வள்ளங்களையே உபயோகிக்கவேண்டும்.

துறைவரி விதிகளின்படி தபால் கொண்டுசெல்லும் சேவகர்களும் அரசாங்க வாகனங்களும் துறைக்கூலி செலுத்தவேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் தபாற்சேவகர்களிடமிருந்தும் அரசாங்க வாகனங்களிடமிருந்தும் துறைக்கூலி எற்கக்கூடாது.

மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

பி. பொன்னுந்து,
மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

கச்சேரி,
மட்டக்களப்பு,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 18 ந உ.

| துறையின் விபரம் | | காரியாதிகாரியின் பிரிவு | | கேள்விப் பத்திரங்கள் முடிவடையும் நேரம் முற்பகல் |
|---|---|---|---|---|
| 1. வெருகல் | .. | கோறளைப்பற்று | .. | 10 00 |
| 2. பனிச்சங்கேணி | .. | கோறளைப்பற்று | .. | 10 15 |
| 3. கிரான் | .. | கோறளைப்பற்று | .. | 10 30 |
| 4. திமிலை தீவு | .. | மண்முனைப்பற்று வடக்கு | .. | 10 45 |
| 5. வலையிறவு | .. | மண்முனைப்பற்று வடக்கு | .. | 11 00 |
| 6. மண்முனை | .. | மண்முனை வடக்கு | .. | 11 15 |
| 7. துறைநீலாவணை | .. | மண்முனை தெ. எ. போ. ப. | .. | 11 30 |
| 8. அம்பிளாந்துறை | .. | மண்முனை தெ. எ. போ. ப. | .. | 11 45 |
| 9. குருமண்வெளி | .. | மண்முனை தெ. எ. போ. ப. | .. | 12 00 |

8–1299—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

# நானாவித அறிவித்தல்கள்

## கிராமாபிவிருத்தி சிறுகைத்தொழில் திணைக்களம்

1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ந் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 17 ந் திகதி வரைக்கும், இரு தினங்களும் உட்பட 180 டீன்ஸ் வீதி, கொழும்பு 10 ல் உள்ள கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களத்தாரின் "நூல் விற்பனை நிலையம்" இருப்புத் திட்டம் எடுப்பதற்காக மூடப்பட்டிருக்கும்.

பி. எச். பி. டி சில்வா,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்.

கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 22 ந் திகதி.

8–1370—29.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,869

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகனி வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | 1.8.69 | வெள்ளி | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 5.9.69 | வெள்ளி | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் | 2.10.69 | வியாழன் | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் | 7.11.69 | வெள்ளி | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசம்பர் | 5.12.69 | வெள்ளி | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு யூன் மீ 13 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகனி.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.